விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 058 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 03 செவ்வாய்க்கிழமை (15.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அதிகாரப் பகிர்வுக்கு பொறிமுறை இல்லை

தென் கொரியாவில் மைத்திரி



7ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்றம் சுமத்த பிரித்தானியா முயற்சி

அமைச்சர் பீரிஸ்



3ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத திருத்த சட்டத்துக்கு எதிராக

உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல்

9ஆம் பக்கம் பார்க்க

# சுகாதார தொழிற்சங்கங்கள் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம்



(15ஆம் பக்கம் பார்க்க)

### ராஜபக்ஷ அரசு ஜனநாயகத்தை அழித்துவிட்டு

# இராணுவ ஆட்சியை கையில் எடுக்க சதி

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டின் ஜனநாயக தன்மைகளை முழுமையாக அழித்துவிட்டு மியன்மாரை போன்றதொரு இராணுவ ஆட்சியை கையில் எடுக்கும் சதிகள் மும்முரமாக இடம்பெற்றுக் கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

### டெங்கு நோயினால்

## 11 வயது மாணவன் கொடிகாமத்தில் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய மாணவன் ஒருவன் டெங்கு நோய்த் தாக்கத்தினால் உயிரிழந்துள்ளார். 15

### பாராளுமன்றத்தில்

## மேலும் 28 பேருக்கு தொற்று உறுதி

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் பல பிரிவுகளில் 3 பிரதானிகள் உட்பட மேலும் 28 ஊழியர்கள் கோவிட் தொற்றுக்குள்ளாகி இருப்பதாக நேற்று உறு 15

## ஊடகவியலாளர் சமுதிக வீட்டின் மீது தாக்குதல்

### சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் பல தரப்பினரும் கடும் கண்டனம்

(கொழும்பு)

பிலியந்தலை, வேவல பிரதேசத்தில் உள்ள - ஊடகவியலாளர் சமு 15

## ஒமிக்ரோன் வைரஸ் மாறுபாடு நாடு முழுவதும் பரவியுள்ளது

### மருத்துவ வல்லுநர் அன்டனி மெண்டிஸ்

(கொழும்பு)

ஒமிக்ரோன் வைரஸ் மாறுபாடு தற்போது நாடு முழுவதும் பரவியுள்ளதாக மருத்துவ வல்லுநர் அன்டனி மெண்டிஸ் தெரிவித்துள்ளார். 15

## 2 ஆயிரம் மில்லியன் வருமானம் பெறுவோருக்கு

### 25 சதவீத ஒரேநேர வரி நிதியமைச்சர் பசில் அறிவிப்பு

(கொழும்பு)

வருடாந்தம் 2 ஆயிரம் மில்லியன் வருமானம் பெறுவோருக்கு மட்டுமே 25 சதவீத ஒருநேர வரி அறவிடப்படும் என நிதியமைச்சர் பசில் ராஜ 16

### கோவிட் தொற்றால்

## நாட்டில் மேலும் 36 பேர் மரணம்

(கொழும்பு)

நாட்டில் மேலும் 36 கோவிட் மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட் 15

## உக்ரேய்ன் எல்லைப் பகுதியில் அதிகரிக்கும் போர்ப் பதற்றம்

### 48 மணி நேரத்துக்குள் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு



8ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மரண அறிவித்தல்



## திருமதி மேனகா தனபாலசிங்கம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும் இல. 19, செல்லர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேனகா தனபாலசிங்கம் நல்லூரானின் நற்கழல் நிழலில் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை மீளாத்துயில் கொண்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - மதனாம்பாள் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - பார்வதியம்மாள் தம்பதியரின் பாசமிகு மருமகளும் தனபாலசிங்கம் (தனம்) அவர்களின் பாசமிகு மனைவியும் ஜெயசிலன் (ஆணையாளர் - யாழ். மாநகர சபை), கவிதா (லண்டன்) ஆகியோரின் அன்புமிகு தாயாரும் செல்வி ரஞ்சனா, காலஞ்சென்ற மனோகரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் லங்கினி (ஆசிரியை-யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி), குமாரதாசன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆருத்ரா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அட்ஷரா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அவ்வை (லண்டன்), அம்பை (லண்டன்) ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 2.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (10200)

தகவல் :-

இல. 19, செல்லர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

இ. தனபாலசிங்கம் (கணவர்)
த. ஜெயசீலன் (மகன்) 077 726 5026
கு. கவிதா (மகள்)

# நீங்காத நினைவுகளுடன்
## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 04 . 1947

மறைவு 08 . 03 . 2020

## அமரர் Lion வைரமுத்து சுப்பிரமணியம்

(முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியர் - KKS,
முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் - வலி. கிழக்கு)

திதி :15.02.2022

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய்
அரவணைப்பில் சிகரமாய் என்றும் புன்னகைத்த முகத்துடன்
உற்றார் உறவினர்க்கு என்றும் உதவிக்கரம் நீட்டி
தன் குடும்பத்தினர் எல்லோரினதும் சீர்சிறப்பிற்கும் வழிகாட்டி
கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப் போனாலும்
உங்கள் ஆத்மா என்றும் இறைவன் திருவடியில் இன்புற்றிருக்க
இறையருளை வேண்டி மலர்தூவி அஞ்சலிக்கின்றோம். (10132)

கோப்பாய் மத்தி, கோப்பாய்.

மகன் Lion Eng. S.சுதர்ஸன்
மற்றும் குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# கண்ணீர் அஞ்சலி



பொலிகண்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் மாத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட கல்யாணி ஸ்டோர்ஸ் உரிமையாளரான அன்புத் தம்பி

## தம்பிராஜா சபாரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு அவர் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நடராஜா விசுவலிங்கம்
குடும்பத்தினர், பொலிகண்டி.

பிறப்பு 23.09.1956. இறப்பு 12.02.2022

(10194)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 07 - 05 - 1951

ஆண்டவன் அடியில் 28 - 02 - 2021

## அமரர் வைரமுத்து ஜெயசந்திரா

திதி : மாசி பிரதமை (17.02.2022)

ஓராண்டு ஒரு கணமாக கரைந்துவிட்டது.
தீராத ஏக்கத்துடன் காலமெல்லாம் உம் நினைவுகளை சுமந்து கொண்டு வாழ்ந்திருப்போம்.


28.02.2021 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வைரமுத்து ஜெயசந்திரா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை மறுதினம் (17.02.2022) வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சோடாக்கடை ஒழுங்கை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

077 850 7010 குடும்பத்தினர்

(10192)

# கண்ணீர் அஞ்சலி



யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவின் தலைவர், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. த. ஜெயசீலன் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

## மேனகா தனபாலசிங்கம்

அவர்கள் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார். அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சைவ சமய விவகாரக் குழு,
யாழ். மாநகர சபை.

(C-3782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் படையினர் மீது போர்க்குற்றங்களை சுமத்த பிரித்தானியா அதீத முயற்சி-அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**இலங்கையின் அரசியல் தலைவர்கள் மற்றும் படையினர் மீது போர்க்குற்றங்களை சுமத்துவதற்கு பிரித்தானியா அதீத முயற்சிகளை மேற்கொண்டதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் உள்ள தேசிய பாதுகாப்பு கல்லூரியில் இடம்பெற்ற, நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனிவாவில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஆரம்பமாகவுள்ள 49 ஆவது மனித உரிமைகள் பேரவை அமர்வில் இலங்கையின் விடயம் முக்கியமானதாக இருக்கும்.

வன்னியில் 2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கை அரச படையினர் சுற்றி வளைத்த போது பல தகவல்களை, அப்போது இலங்கையில் பிரித்தானிய உயர்ஸ்தானிகரகத்தில் கடமையில் இருந்த பாதுகாப்பு அதிகாரி லெப்டினன்ட் கேணல் அன்டனி காஸ் சேகரித்தார்.

இலங்கையின் பொறுப்புகூறல் விடயங்களில் அதிக அக்கறை கொண்டுள்ள பிரித்தானியர்களுக்கு அவர்களின் சொந்த பணியாளர்கள் அனுப்பிய தகவல்கள் உதவியிருக்கும்.

மேலும், சர்வதேச சட்டங்களின்படி இலங்கையின் அரச படையினரை சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# மரண அறிவித்தல்

தோற்றம் 02 - 12 - 1939



மறைவு 13 - 02 - 2022

## திரு.ஆசைப்பிள்ளை இராசதுரை

யாழ்ப்பாணம் ஈவினையை பிறப்பிடமாகவும் Permin 262, 1503 GD Zaandam நெதர்லாந்தை வதிவிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை இராசதுரை அவர்கள் கடந்த (13.02.2022) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை ஆசைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான துரைத்தம்பி, தம்பிராசா, சத்தியமூர்த்தி ஆகியோரின் சகோதரனும், செல்லமலர் அவர்களின் கணவரும், கனகசபை (கனடா) அவர்களின் அன்புத் தந்தையும், இராசமலர், செல்வநாயகி (நெதர்லாந்து) ஆகியோரின் மைத்துனரும், சிவப்பிரியா (DS office Kopay), கபில்ராஜ், சரணியா, சிந்துஜா, ஷகிந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும், துசித்தா (கனடா), நிரோஜினி அவர்களின் மாமனாரும், வையகன், வெண்பா (கனடா) அவர்களின் பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் (16.02.2022) புதன்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் Wibautstraat 282, 1505HR, zaandam நெதர்லாந்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

076 080 5485
0031612295493

தகவல்
பெறாமக்கள்

(C-3778)

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## முத்துச்சாமி அந்தோனிப்பிள்ளை

திதி : 15.02.2022

ஆண்டொன்றானாலும் உங்கள்
நினைவுகள் ஆறாது எம் இதயத்தில்
ஈரமாய் எம் இதயத்தில்
கனக்க வைக்கிறது ஐயா
மறு வடிவில் வருவீர்கள் என
ஏங்கி எதிர்பார்க்கும்
உங்கள் பாசமான உறவுகள்

ஓமந்தை,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்.

(C-3775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



பிறப்பு
11 - 02 - 1941

இறப்பு
14 - 02 - 2022

## பாலசுந்தரம் திலகமணி

கரணவாய் மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் திலகமணி அவர்கள் நேற்று (14.02.2022) திங்கட்கிழமை காலை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் அவர்களின் பாசமிகு பாரியாரும் காலஞ்சென்ற நிர்மலன் மற்றும் நிர்மானுசன், நிர்மலா (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் தில்லைநாதன் (சட்டத்தரணி), கமலாம்பிகை (ஜேர்மனி), விமலாம்பிகை (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மதுரங்கன் (இங்கிலாந்து), காலஞ்சென்ற கிருஷ்ணிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் ஜெயபாலசிங்கம் (இங்கிலாந்து), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அபிராமி (ஜேர்மனி), கௌசி (இங்கிலாந்து), கயன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் துஷான், தெர்சன், நற்றவன், நேரியன், நிஷாலினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டெவின், ஆர்வின், அயலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15.02.2022) செவ்வாய்க் கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். (C-3781)

மூத்தவிநாயகர் கோயிலடி,
கரணவாய்.

தகவல் :-
குடும்பத்தினர்

# அவுஸ்திரேலியாவிடம் போராடி தோற்றது இலங்கை அணி




இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி சுப்பர் ஓவரில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில், 2-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி முன்னிலை பெற்றுள்ளது.

சிட்னியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை கிரிக்கெட் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 8 விக் கெட்டுகள் இழப்புக்கு 164 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. வெற்றி இலக்கு சமநிலை பெற்றதால், போட்டி சுப்பர் ஓவருக்கு நகர்ந்தது.

இதனையடுத்து சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை கிரிக்கெட் அணி, ஐந்து ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இந்த வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, மூன்றாவது பந்திலேயே வெற்றி இலக்கை கடந்தது.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றாவது இருபது-20 போட்டி, இன்று கன்பெரா மைதானத்தில் நடைபெறவுள்ளது. (4)


# வர்த்தகத் தொழிற்துறை மன்றத்தின் தொழில் சந்தையில் உங்களையும் இணைத்துக்கொள்ளுங்கள்

## Join with us on CCIY's JOB BANK




யாழ்ப்பாணம் வர்த்தகத் தொழிற்துறை மன்றமானது தனது அடுத்த இலக்காக தொழிற்சந்தை ஒன்றை செயற்படுத்த உள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக கட்டமைப்பை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் தமது செயல் திட்டத்தின் முதற்கட்டமாக தொழில் வழங்கும் சேவை நிறுவனங்கள் (Job Agencies) மற்றும் தொழில் தேடுபவர்கள் (Job Seekers) அனைவரையும் இணைத்து தொழிற் சந்தையினூடாக அவர்களது தொழில் வாய்ப்பு சார்ந்த தேவைகளை பூர்த்தி செய்ய தீர்மானித்துள்ளது.

German நாட்டின் BMO Partnership திட்டத்தின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக இச் செயல் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எம்முடன் இணைந்து செயல்பட ஆர்வமுள்ள தொழில் வழங்கும் சேவை நிறுவனங்கள் (Job Agencies) மற்றும் தொழில் தேடுபவர்கள் (Job Seekers) அனைவரும் உங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 28-02-2022 திகதிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு (info@cciy.lk) அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப படிவங்களை எமது Facebook page (CCIY – Chamber of Comerce and Industries of Yarlpanam) இன் ஊடாக தரவிறக்கம் செய்தோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (info@cciy.lk) பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு : 070 366 3600**

(C-3780)

Chamber of Commerce and Industries of Yarlpanam
55, Kachcheri Nallur Road, Jaffna
021 222 6609
info@cciy.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் புங்குடுதீவு பெருங்காடு மூத்தநயினார்புலம்
# ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா





நிகழும் மங்களகரமான பிலவ வருடம் 15 தைமாதத்தில் விநாயகப் பெருமானின் திருவருளோடு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிகழ்வதற்கு விநாயகப் பெருமானின் திருவருளும் மஹோற்சவ பிரதம குருவின் ஆசியும் பரிபாலன சபையினரின் அனுசரணையும் உபயகாரர்களின் ஆதரவும் விநாயக அடியார்களின் ஆதரவாலும் இன்றைய தினம் வெள்ளோட்ட நிகழ்வு நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியவர்கள் அனைவருக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

(சி-3776)

விளம்பர அனுசரணை
அம்பாள் களஞ்சியம்
பிரதான வீதி, புங்குடுதீவு.

மனோன்மணி ரவல்ஸ்
776, புங்குடுதீவு.

ஆகீசன் பிறிண்டர்ஸ்
1ம் வட்டாரம், புங்குடுதீவு.


## தொலைபேசி பயன்படுத்த பெற்றோர் மறுப்பு விபரீத முடிவெடுத்து மாணவன் உயிரிழப்பு

(கொழும்பு)

கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்த பெற்றோர் மறுத்ததால் 12 வயது மாணவன் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஒன்லைன் கல்விக்காக பெற்றோர் கொடுத்த மொபைல் போனில் அடிக்கடி கேம் விளையாடி வந்துள்ள நிலையில் வீட்டார் தொலைபேசியை கொடுப்பதற்கு மறுப்புத் தெரிவித்த நிலையில் வீட்டின் கூரையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் அநுராதபுரம் புனித ஜோசப் கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## சித்தியடையாத மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க திட்டம்

(கொழும்பு)

2020 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தகுதி பெறாத மாணவர்களை தொழிற் பயிற்சிக்கு உட்படுத்தி அவர்களுக்கான வேலைவாய்ப்பை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்தினால் இந்த வேலைத்திட்டம், திட்டமிடப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# இராசிபலன்

15.02.2022
மாசி 03, செவ்வாய்க்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 10.31 மணிவரை

பூசம் பிற்பகல் 2.36 மணிவரை
சுபநேரம் - 11.03-12.33 மணிவரை
இராகுகாலம் -03.33 -05.03 மணிவரை

சந்திராஷ்டமம்
மூலம், பூராடம்

வளவன்

**மேஷம்**
தொட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்**
சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார்கள், விடாமுயற்சிக்கு இன்று வெற்றிகிடைக்கும்.

**மிதுனம்**
தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள்.

**கடகம்**
ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் மகிழ்ச்சியடைவீர்கள், பொறுமையால் பெருமை காணும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**
ஏடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு தேவை வழிபாட்டால் அமைதி காணும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், ஒளிமயமான வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**துலாம்**
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்**
வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம்உருவாகும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விருந்தினர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு**
எதையும் பலமுறை யோசித்துச் செயற்படுவது நல்லது, உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**மகரம்**
மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்**
குடும்பத்தினருடன் ஏற்பட்ட முரண்பாடுகள் அகலும்,தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்,கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**மீனம்**
புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் பெருக வழியமைத்துச் கொள்வீர்கள்,நீண்ட நாட்களாக செய்ய நினைத்த வேலையொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

மற்றவர்களை நம்பும் அளவுக்கு உன்னையே நீ நம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத தொழிலில் ஈடுபடுவோரின் தொழில் உரிமம் விலக்கப்படும்

## கடற்றொழில் அமைச்சர் உறுதி

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் மீனவர் சங்கங்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

அண்மைக் காலமாக அதிகரித்துள்ள சட்டவிரோத தொழில் நடவடிக்கையினை கட்டுப்படுத்தும் முகமாகவே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன்போது சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளால் கடுமையாகப் பாதிக்கப்படுவதாக கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளால் விரிவாக அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கான இடைக்கால 9 நபர்கள் கொண்ட நிர்வாக சபையும் குறித்த கலந்துரையாடலில் தெரிவு செய்யப்பட்டது.

கடற்றொழில் சங்கங்களுக்கும் சமாசத்திற்கும் திணைக்களத்திற்கும் கட்டுப்படாத எந்த தொழில் நடவடிக்கையாயினும் சரி வேறு எந்தப்பிரச்சினைகளாயினும் சரி ஏற்படின் பட்சத்தில் அவர்களுடைய தொழில் உரிமம் விலக்கப்படும் எனவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (4-5-64)

# வீதியைப் புனரமைத்துத் தருமாறு

## பயணிகள் கோரிக்கை



(கரணவாய்)

புத்தூர் சந்தியில் இருந்து சுன்னாகம் வரை செல்லும் பிரதான வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் மிகவும் சேதமடைந்த நிலையில் காணப்படுகிறது.

புத்தூர் சந்தியில் இருந்து சுன்னாகம் வரை செல்லும் வீதியில் நாலாபக்கமும் இருந்து வாகனங்கள் செல்லும் பிரதான வீதியாக அமைந்துள்ளது.

விவசாயிகள் தங்களுடைய விளைபொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்லுதல், பணியாளர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் கொழும்பில் இருந்து கொண்டு வரப்படும் உணவுப்பொருட்கள், விவசாயப் பொருட்களை ஏற்றி வரும் வாகனங்கள், பெற்றோலிய கூட்டுத்தாபன வாகனங்கள் இவ் வீதியைப் பயன்படுத்துகின்றன.

அண்மையில் பெய்த மழையால் இவ்வீதி மேலும் சேதமடைந்து காணப்படுகிறது. எனவே இவ்வீதியைப் புனரமைப்பு செய்து தருமாறு இவ்வீதியால் பயணிப்போர் வீதி அதிகார சபையைக் கேட்டுக் கொள்கின்றனர். (5-4-60)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(அராலி)

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வேலணைச் சந்தியில் நேற்று கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவ புலனாய்வு பிரிவினரும் ஊர்காவற்றுறை பொலிஸாரும் இணைந்து இக்கைது நடவடிக்கையை மேற்கொண்டனர். இதன்போது 24 வயதுடைய குறித்த சந்தேகநபரிடமிருந்து 50 கிராம் எடையுடைய கேரளக் கஞ்சாப் பொதியொன்று கைப்பற்றப்பட்டது.

குறித்த நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் ஊர்காவற்றுறை நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (5-4-104)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட திரிசாரணர் குழாமின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் இடம்பெறும். குருதிக் கொடையாளர்களைக் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (5)



ஹற்றன் நஷனல் வங்கியினுடைய பணிப்பாளர் சபை தலைவர் திருமதி.அருணி குணதிலக கடந்த வியாழக்கிழமை வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டு வங்கியின் வாடிக்கையாளர்களான தொழில் முயற்சியாளர்களை சந்தித்ததுடன் வங்கியின் கூட்டு சமூகப் பொறுப்புணர்வு செயற்றிட்டங்கள் ஊடான பல உதவிகளையும் வழங்கி வைத்தார். (படம்: சிவசாந்தன்)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் பருத்தித்துறை பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (படம்-மகாலிங்கம்)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு மணல் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளது. (5)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறும்.

இளம் சைவப்புலவர் ச. நவநீதன் "ரதோற்சவம் உணர்த்தும் வாழ்வியல்" என்னும் விடயப் பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (5)

---

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் ஆண்டிலே இளம் இந்துச் சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக, யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் "வாராந்தச் சொற்பொழிவும் - மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்க அறநெறிப் பாடசாலையில்,

"சைவ சமய மறுமலர்ச்சியின் தந்தை நாவலர்" என்னும் தொனிப்பொருளில் சைவப்புலவர் தெ.த.குமாரனின் சொற்பொழிவு இடம்பெறும். (5-4)

# சிலை திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மக்கள் கலைஞர் அமைப்பினால் அமைக்கப்பெற்ற கலாநிதி நடிகமணி வி.வி.வைரமுத்துவின் சிலை திறப்பு விழா நாளை 16 ஆம் திகதி புதன் கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும்.

அமைப்பின் தலைவர் கி.மனோகரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக வலி. வடக்கு பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ நடேஸ்வரக் கல்லூரி அதிபர் கு.விமலன், நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலய அதிபர் வசந்தராணி சுதர்சன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ. சுகிர்தனும் கலந்து கொள்வர். (5)



வடமராட்சியில் அமைந்துள்ள கணபதி அறக்கட்டளை நிறுவனத்தின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. ஓய்வுபெற்ற அதிபர் செ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.சிவசிறி, முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்-மகாலிங்கம்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 230 | 280 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 150 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 700 | 700 | 700 |
| தக்காளி | 120 | 200 | 150 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 90 | 50 |
| கோவா | 150 | 180 | 200 | 240 |
| கரட் | 320 | 550 | 550 | 600 |
| பூசணி | 120 | 150 | 150 | 200 |
| புடோல் | 160 | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 300 | 100-300 | 480 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 120-160 | 160 |
| பாகற்காய் | 250 | 250 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 250 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 150 | 100 | 120 |
| பயற்றங்காய் | 250 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 120 | 220 | 200 | 200 |
| பீற்றூட் | 240 | 300 | 320 | 300 |
| கறிமிளகாய் | 400 | 450 | 450 | 480 |
| முருங்கைக்காய் | - | - | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 180 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | - | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 100 | 140 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 30-80 | 60-80 |
| இராசவள்ளி | - | 250 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 180 | 120 | 200 | 200 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 60 | - | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையான அதிகாரப்பகிர்விற்கான பொறிமுறை இதுவரை இலங்கையில் வகுக்கப்படவில்லை

## தென்கொரியாவில் மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் சிவில் யுத்தம் நிறைவிற்கு கொண்டு வரப்பட்டு 12 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்றும் அதிகாரப்பகிர்விற்கான நிலையான பொறிமுறை ஒன்று அடையாளப்படவில்லை. சர்வதேசம் எதிர்பார்க்கும் தேசிய நல்லிணக்கம் நாட்டில் பூரணப்படுத்தப்படவில்லை என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.**

தென்கொரியாவில் கடந்த வாரம் இடம்பெற்ற சமாதானம் தொடர்பிலான மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுதலை பெற இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராடினார்கள்.

இருப்பினும் தேசிய மற்றும் வெளிநாட்டு அழுத்தங்களினால் பொறாமை, எதிர்ப்பு, இனங்களுக்கிடையில் பிளவுகள் தோற்றம் பெற்று அது அரசியல் பிரச்சினையாக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து அரசிற்கு எதிரான போராட்டங்கள் தலைதூக்கின. 65,610 சதுர கிலோமீற்றர் பரப்புகளைக் கொண்ட இலங்கை தீவினை எல்லை அடிப்படையில் பிளவுபடுத்த தீவிரவாத தரப்பினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டனர்.

நாட்டுக்குள் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு சமாதான முறையில் தீர்வு காண அரசு பல்வேறுபட்ட பேச்சுவார்த்தையினை முன்னெடுத்தது. நோர்வே அரசாங்கத்தின் தலையீட்டில் இலங்கையில் 2002 ஆம் ஆண்டு போர் நிறுத்த ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது.

இலங்கையில் காணப்பட்ட தீவிரவாதத்தை சமாதான முறைமையின் கீழ் நிறைவிற்கு கொண்டுவர முன்னெடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் இறுதியில் தோல்வியடைந்தன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதை தொடர்ந்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், ஜனநாயகம் ஆகியவற்றை இலங்கையில் உறுதிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையின் எட்டாவது பொதுச் செயலாளர் பான்கி மூன் முன்னேற்றகரமான தீர்மானங்களை முன்னெடுத்தார்.

முரண்பாடுகளுக்கு யுத்தம் தீர்வாக அமையாது. இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டது.

இலங்கையில் சிவில் யுத்தம் நிறைவிற்குக் கொண்டு வரப்பட்டு 12 வருடம் கடந்துள்ள நிலையில் இன்றும் நிலையான அதிகார பகிர்விற்கான பொறிமுறை வகுக்கப்படவில்லை. சர்வதேசத்தின் மதிப்பீட்டிற்கமைய தேசிய நல்லிணக்கம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என அவர் தெரிவித்தார். (நி)


SHANTHIHAM
Association for Health & Counselling

**Consultant for Baseline Survey**

SHANTHIHAM – Association for Health and Counselling is looking for a consultant with relevant experience and expertise to lead a team and undertake Baseline Survey for Improving Gender Equality in Northern Province of Sri Lanka project to be implemented by Shanthiham in Jaffna, Kilinochchi and Mullitievu Districts. People who are interested and possess relevant experience and qualifications please contact hr.shanthiham@gmail 0212223338 to obtain TOR for this assignment and apply before 20th of February 2022.

(C-3777)



**மாண்புறு மணிவிழாவில் மகிழ்வுறும் வாழ்த்துக்கள்**

யா/தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலையின் விஞ்ஞான ஆசிரியராக மிளிர்ந்து ஓய்வு பெறும்

திருமதி. ரதிதேவி சிவகுமாரன் SLTS I
(Science Trd, B.A, PGDE)



அவர்களின் சேவையில் உயர்வு பெற்றோம்

சேவை விபரம்

யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை – 06.04.1988 – 31.12.1989
யாழ்.பலாலி ஆசிரிய கலாசாலை – 01.01.1990 – 31.01.1992
யா/ ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலை – 01.02.1992 – 13.02.1992
யா/கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் – 14.02.1992 – 08.03.1994
யா/இணுவில் இந்துக் கல்லூரி – 09.03.1994 – 21.01.2014
யா/ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை – 22.01.2014 – 05.02.2014
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை – 06.02.2014 – 14.02.2022

இவரின் இன்றைய மணிவிழா நாளில் மனம் நிறைந்து வாழ்த்துவோர்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கற்பித்தல் சாரா பணியாளர்கள்
மற்றும் பழைய மாணவ சங்கத்தினர்
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.

(10164)



**சேவை நலன் பாராட்டு**

முல்லை. மண்ணில் அளப்பெரிய கல்விப் பணியினை ஆற்றி இன்று 15.02.2022 இல் ஓய்வு பெறும் பேராசான்
கணிதபாட ஆசிரிய ஆலோசகர்

திரு. சின்னத்தம்பி அன்புமணி

அவர்களை இறையாசீர் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்



சேவை விபரம்

1. மு.கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை,
2. மு/கொக்குளாய் அ.த.க.பாடசாலை (பகுதி நேரம்-1 வருடம்) – 1982.04.21 – 1985.01.20
3. யாழ்/பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை – 1985.01.21 – 1986.12.31
4. மு.அம்பலவன் பொக்கணை அ.த.க.பாடசாலை – 1987.01.01 – 1988.05.10
5. மு/குமுழமுனை மகா வித்தியாலயம் – 1988.05.11 – 1991.02.28
6. மு.புதுக்குடியிருப்பு றோ.க.வித்தியாலயம் – 1991.03.01 – 1994.01.31
7. கல்வித் திணைக்களம் – முல்லைத்தீவு (பகுதி நேர ஆசிரிய ஆலோசகர் – கணிதம்) – 1991.09.01 – 1994.01.31
8. கல்வித் திணைக்களம் – முல்லைத்தீவு, வலயக்கல்வி அலுவலகம் – முல்லைத்தீவு ஆசிரிய ஆலோசகர் –கணிதம்– 1994.02.01 – 2022.02.15

ஊழியர் நலன்புரிச்சங்கம்
வலயக்கல்வி அலுவலகம்,
முல்லைத்தீவு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்களை காவு வாங்கிய இராட்சத அலை
### இந்தோனேசியாவில் சோகம்

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் இராட்சத அலையில் சிக்கிய 11 பேர் உயிரிழந்த சம்பவம் அங்கு பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேசியாவின் கிழக்கு ஜாவா மாகாணத்தில் உள்ள ஜெம்பர் மாவட்டத்தில் பயங்கன் என்ற கடற்கரை உள்ளது. இந்த கடற்கரையில் நேற்று முன்தினம் பாரம்பரிய சடங்கு நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இதையொட்டி அதிகமானோர் கடற்கரையில் திரண்டு சடங்குகளை செய்து கொண்டிருந்தனர்.

திடீரென எழுந்த இராட்சத அலை கரையில் நின்று கொண்டிருந்த 23 பேரை உள்ளே இழுத்துச் சென்றது. இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது.

தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்புப் பணியில் இறங்கினர். எனினும் பல மணி நேர தேடுதல் வேட்டைக்குப் பின் அவர்கள் 11 பேர் பிணமாக மீட்கப்பட்டனர்.

பாரம்பரிய சடங்கு நிகழ்ச்சியின் போது இராட்சத அலையில் சிக்கி 11 பேர் உயிரிழந்தது இந்தோனேசியாவில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. (நி)

## பதற்றங்களை தணிக்கும் வகையில் 48 மணி நேரத்திற்குள் பேச்சுவார்த்தை
### ரஷ்யாவிற்கு உக்ரேயன் அழைப்பு

(கீவ்)

**எல்லையில் அதிகரித்து வரும் பதற்றங்கள் தொடர்பாக பேசுவதற்கு வருமாறு ரஷ்யா மற்றும் முக்கிய ஐரோப்பிய பாதுகாப்பு குழுவின் ஏனைய உறுப்பினர்களுக்கு உக்ரேயன் அழைப்பு விடுத்துள்ளது.**

ரஷ்யாவின் திட்டங்கள் குறித்து வெளிப்படையான கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அடுத்த 48 மணி நேரத்திற்குள் ஒரு சந்திப்பை கோருவதாக உக்ரேயன் வெளிவிவகார அமைச்சர் டிமிட்ரோ குலேபா, தெரிவித்தார்.

உக்ரேயன் எல்லையில் சுமார் 100,000 துருப்புக்களை ரஷ்யா குவித்துள்ளது. எனினும் உக்ரேயன் மீது படையெடுக்கும் திட்டம் ஏதும் இல்லை என அந்நாடு தெரிவித்துள்ளது.

ஆனால் உக்ரேயனை ஆக்கிரமிக்கும் நோக்கில் ரஷ்யா இராணுவ நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் எச்சரித்துள்ளன.

எந்த நேரத்திலும் வான்வழி குண்டு வீச்சுகளுடன் உக்ரேயன் மீதான ஆக்கிரமிப்பு தாக்குதல்களை ரஷ்யா தொடங்கலாம் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

இவ்வாறான நிலையில் அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, நெதர்லாந்து, லாட்வியா, ஜப்பான் மற்றும் தென் கொரியா உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட நாடுகள் உக்ரேயனை விட்டு வெளியேறுமாறு தங்கள் குடிமக்களை வலியுறுத்தியுள்ளன.

அத்துடன், அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் உக்ரேயன் தலைநகரில் உள்ள தமது பெரும்பாலான ஊழியர்களையும் வெளியேற்றத் தொடங்கியுள்ளன. அடுத்த 48 மணி நேரத்திற்குள் உக்ரேயன் தலைநகர் கீவ்வில் உள்ள அனைத்து பணியாளர்களையும் திரும்பப் பெற அமெரிக்கா தயாராகி வருவதாக அமெரிக்க இராஜதந்திர வட்டாரங்களை மேற்கோள் காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பதற்றங்களைத் தணிக்கவும் அனைவரது பாதுகாப்பை உறுதி செய்யவும் ரஷ்யா முன்வர வேண்டும் என உக்ரேயன் வெளிவிவகார அமைச்சர் அழைப்பு விடுத்தார். (நி)

## உக்ரேயன் எல்லைப் பகுதிக்கு ஹெலிகளை அனுப்பியது ரஷ்யா
### அதிகரிக்கும் போர்ப் பதற்றம்

(கீவ்)

தனது போர் ஹெலிகொப்டர்கள் குழுவை உக்ரேயன் எல்லைக்கு ரஷ்யா அனுப்பியுள்ளதாகவும், இதனால் ரஷ்ய படையெடுப்பு குறித்த அச்சம் அதிகரித்துள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்கு பெல்கோரோட் பகுதியில் ரஷ்ய போர் ஹெலிகொப்டர் பறப்பதை வீடியோ காட்சிகள் உறுதிப்படுத்துகின்றன.

2014 ஆம் ஆண்டு கிரிமியன் தீபகற்பத்தை ஆக்கிரமிக்க ரஷ்யா தாக்குதலை நடத்திய போது, மேற்கு பெல் கொரோட் பகுதியில் இதேபோன்ற தாக்குதல் ஹெலிகொப்டர்கள் காணப்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (நி)

## மேலும் 54 சீன செயலிகளுக்கு இந்தியா தடை

(டில்லி)

பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்த காரணமாக 54 சீன செயலிகளுக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ளது.

இந்தத் தகவலை இந்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் உயர் மட்ட ஆதாரங்கள் தெரிவித்துள்ளன.

2020 ஜூன் முதல், TikTok, Shareit, WeChat, Helo,Likee,UC News, Bigo Live, UC Browser, ES File Explorer மற்றும் Mi Community போன்ற பிரபலமான பயன்பாடுகள் உட்பட சுமார் 224 சீன ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி பயன்பாடுகளை இந்திய அரசாங்கம் தடை செய்துள்ளது. இந் நிலையிலேயே புதிய தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (நி)

## ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்லாயிரக்கணக்கான உக்ரேய்னியர்கள் பேரணி




(கீவ்)

ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு எதிர்ப்புத்தெரிவித்து பல்லாயிரக்கணக்கான உக்ரேய்னியர்கள் எதிர்ப்பு பேரணியொன்றை முன்னெடுத்துள்ளனர்.

தலைநகர் கீவ்வில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை குளிர் காலக் குளிரைத் தாங்கிக்கொண்டு ஒன்று திரண்ட மக்கள், கொடிகளை அசைத்து, தேசிய கீதத்தைப் பாடி, அணிவகுத்துச் சென்றனர்.

'பீதி பயனற்றது. நாம் ஒன்றுபட்டு சுதந்திரத்திற்காக போராட வேண்டும்,' எனவும், சிலர் 'போர் தீர்வு அல்ல' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியும் சென்றனர்.

உக்ரேய்ன் மீது முழுமையாகப் படையெடுப்பதற்கு தேவையான இராணுவ படைகளில் 70 சதவீதத்தை ரஷ்யா திரட்டியுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் உக்ரேய்ன் மீது படையெடுக்கும் எண்ணம் இல்லை என ரஷ்யா தொடர்ந்து கூறி வருகிறது.

எனினும், மொஸ்கோ ஆதரவு பெற்ற பிரிவினைவாத கிழக்கு முழுவதும் 14,000 இற்கும் அதிகமான மக்களைக் கொன்ற எட்டு ஆண்டு கால மோதலால் பாதிக்கப்பட்ட உக்ரேய்ன் இப்போது ரஷ்யாவின் முழுப் படையெடுப்பின் அச்சுறுத்தலை எதிர்கொள்கிறது.

கிரெம்ளின் அதன் மேற்கு அண்டை நாட்டைச் சுற்றி சுமார் 130,000 துருப்புகளைக் குவித்துள்ளது, பெலாரஸ் முழுவதும் அதன் வடக்கே போர்ப் பயிற்சிகளையும் அதன் தெற்கே கருங்கடலில் கடற்படை பயிற்சிகளையும் நடத்துகிறது.

'எந்த நேரமும் போர் வெடிக்கலாம்' என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது. மேற்கத்திய நாடுகள் தங்கள் இராஜ தந்திரிகளை தலைநகர் கீவ்வில் இருந்து வெளியேற்றி, குடிமக்களை உடனடியாக உக்ரேய்னில் இருந்து வெளியேறுமாறு கட்டளையிடுகின்றன. நேட்டோ நட்பு நாடுகளும் கூடுதலான துருப்புக்கள் மற்றும் இராணுவ உபகரணங்களை உக்ரேய்னுக்கு அனுப்புவதன் மூலம் ஆதரவை அதிகரித்துள்ளன. (நி)

## குர்ஆனை தீயிட்டு கொளுத்தியவர் சித்திரவதை செய்து படுகொலை
### பாகிஸ்தானில் கொடூரம்

(இஸ்லாமாபாத்)

இஸ்லாமியர்களின் புனித நூலான குரானின் பக்கங்களைத் தீயிட்டு எரித்து மத நிந்தனை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவர் கும்பல் ஒன்றினால் கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார். பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணம் - கானே வால் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை இந்தக் கொலை இடம்பெற்றது.

இக்கொலை தொடர்பாக 80 இற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்தில் உள்ள சியால்கோட் நகரில் மத நிந்தனை செய்ததாக இலங்கையர் ஒருவர் அடித்து, எரித்துக் கொடூரமாக கொலை செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி இரண்டு மாதங்களுக்குள் இவ்வாறான மற்றொரு படுகொலை இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் கட்டுப்பாட்டில் இருந்த நபரை இழுத்துச் சென்றே வன்முறைக் கும்பல் அடித்துக் கொலை செய்துள்ளது. இந்த வழக்கு சட்ட ரீதியாக கடுமையாக கையாளப்படும் என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொள்வோருக்கு எதிராக பாகிஸ்தான் அரசு துளியும் சகிப்புத்தன்மை காட்டாது எனவும் தெரிவித்துள்ளார்.

தடிகள், கோடரிகள், இரும்புக் கம்பிகள் ஆகியவற்றை கொண்டிருந்த கிராமவாசிகள் அந்த நபரைக் கொலை செய்து அவரது உடலை மரமொன்றில் தொங்க விட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்ட நபர் கடந்த 15 ஆண்டுகளாக மனநிலை பாதிக்கப்பட்டு இருந்ததாக சம்பவம் நடந்த பகுதிக்கு பொறுப்பாக இருந்த பொலிஸ் தலைமை அதிகாரி தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் கிராமத்தை விட்டு வெளியேறும் மக்கள்



(கண்டாவளை)

துணுக்காய் உயிலங்குளம் ஐம்பது வீட்டுத்திட்டத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்கள் போதிய அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருவதாகவும் தமக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள உயிலங்குளம் கிராமத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட ஐம்பது வீட்டுத்திட்டத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணிகளற்ற பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் விசேட தேவைக்குட்பட்டோர் என 60 குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர்.

இதனைவிட போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் பிரதான வீதி முதல் குடியிருப்பு வீதிகள் வரை எல்லா வீதிகளும் புனரமைக்கப்படாமல் காணப்படுவதுடன் தண்ணீர் வசதி, முன்பள்ளி வசதிகள், பாடசாலை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளின்மையால் இங்கு குடியிருந்த 60 குடும்பங்களில் 28 வரையான குடும்பங்கள் வேறு இடங்களுக்குச் சென்றுள்ளன.

குறிப்பிட்ட சில குடும்பங்களுக்கு கடந்த ஆண்டுகளில் புதிய வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்ட நிலையில் அவையும் முழுமைப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இந்த நிலையில் மேற்படி மாதிரிக் கிராமத்தின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-315)

# அதிகரிக்கப்பட்ட சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கல் யாழில் ஆரம்பம்



(அராலி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவின் "சுபீட்சத்தின் நோக்கு" எனும் எண்ணக்கருவிற்கு அமைய சமுர்த்தி பயனாளிகளுக்காக அரசினால் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி மானியத்தொகை, குறைந்த வட்டியிலான கடன் வழங்கும் ஆரம்ப நிகழ்வு யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியில் இடம்பெற்றது.

2022 ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்டதற்கு இணங்க நாடு பூராகவும் அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி உதவித்தொகை வழங்கும் நிகழ்வு இடம் பெற்று வரும் நிலையில் யாழில் நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், யாழ்.பிரதேச செயலர் ஆகியோர் கலந்துகொண்டு அதிகரிக்கப்பட்ட மானிய தொகை மற்றும் கடன் தொகையை சமுர்த்தி பயனாளிகளுக்கு வழங்கி வைத்தனர்.(5-4-18-33-104)

# பயங்கரவாத திருத்தச் சட்டமூலத்தை சவால் செய்து உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

1979 ஆம் ஆண்டு 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தை (தற்காலிக ஏற்பாடு) திருத்துவதற்காக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட திருத்தச் சட்டமூலத்தை சவால் செய்து நேற்று திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்தத் திருத்தச் சட்டமூலம் இலங்கையின் அரசியலமைப்பை மீறுவதாக தீர்ப்பளிக்குமாறு விசேட மனுவில் கோரப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றால், அதற்கு பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை தேவை. அல்லது சர்வஜன வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# 17 வயது சிறுவன் போதைப் பொருளுடன் கைது

(தருமபுரம்)

பளை பொலிஸ்பிரிவிற்குட்பட்ட முகமாலை பகுதியில் நேற்று முன்தினம் இரவு 17வயதுடைய சிறுவன் ஒருவனை போதைப்பொருள் உடமையில் வைத்திருந்த குற்றத்திற்காக இராணுவத்தினர் கைது செய்தனர்.

இராணுவத்தினரின் திடீர் சோதனையின் போது குறித்த சிறுவனிடம் போதைப்பொருள் இருந்துள்ளமையையடுத்து சிறுவன் கைது செய்யப்பட்டு பளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-316)

# பயங்கரவாதத்தை முழுமையாக நீக்கக்கோரி கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக நீக்குமாறு வலியுறுத்தி மேற்கொள்ளப்படும் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கொழும்பில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்பு, கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளர் சுமந்திரனின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்களும் பங்கேற்கவுள்ளனர்.

1979 ஆம் ஆண்டு தற்காலிக விதிகள் சட்டமாக கொண்டு வரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் 40 ஆண்டுகளுக்கும் மேலாக செயற்பாட்டில் உள்ளது.

அன்றைய அரசாங்கத்திற்கு எதிரான கருத்து வேறுபாடுகளை நசுக்க கொண்டுவரப்பட்ட இச்சட்டம் இன்றும் தொடர்கிறது என கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வாரம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் வெளிவிவகார அமைச்சரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# மீனவர்களை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கிறது அரசு

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு

(அராலி)

தமிழ் நாட்டு மீனவர்களும் இலங்கை மீனவர்களும் அடிபட்டு சாக வேண்டும் என்பதற்காகவே இலங்கை அரசாங்கம் மீனவர்களின் பிரச்சினைகளை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கின்றனது என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2017 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு படகு ஒழுங்குபடுத்தல் சட்டம் மற்றும் இழுவை மடி தடைச் சட்டம் ஆகியவற்றை நடை முறைப்படுத்த வேண்டும். தமிழக மீனவர்களை நாம் விரோதியாக பார்க்க கூடாது. ஒரு பிரச்சினைக்கு ஒரு தீர்வு உண்டு. அதை பயன்படுத்தி தீர்வைக் காண வேண்டும் எனத் தெரிவித்தார். (5-104)

# அண்மையில் பெய்த மழையால் மின்சாரத் தட்டுப்பாடு குறையும்

(கொழும்பு)

அண்மையில் பெய்த மழை காரணமாக 20 கிகாவோட் மின் உற்பத்தியினை மேற்கொள்வதற்கு தேவையான நீர், கிடைக்கப்பெற்றுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அது மின் துண்டிப்பை மேற்கொள்ளாதிருப்பதற்கு போதுமானதல்ல என அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

20 கிகாவோட் மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கு தேவையான நீர் கிடைக்கப்பெற்றுள்ளதால், மின்சாரத்திற்கு ஏற்பட்டிருந்த தட்டுப்பாடு 47 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதனை முகாமைத்துவம் செய்வதற்கு இலங்கை மின்சார சபையுடன் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும் 200 மெகாவோட் மின்சாரம் எதிர்வரும் நாட்களில் மழைவீழ்ச்சியின் ஊடாக கிடைக்கப்பெறுமானால், சில நாட்களுக்கு மின் துண்டிப்பின்றி மின்சார விநியோகத்தை மேற்கொள்ள முடியும் என பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (5-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2022-14.03.2022



**புத்திக்கூர்மையுடன் செயற்பட்டு புதுமை படைக்கும் மிதுன இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கமும் இருக்கிறது. குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும். தேவைக் கேற்ற பணம் வந்து சேரும்.

**ராகு- கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் ராகுவும், 6 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். இட மாற்றம் இனிமை தரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வு பெற்று சுயதொழில் தொடங்குவது பற்றி சிந்திப்பார்கள். 6 இல் கேது இருப்பதால் மறைமுக எதிர்ப்புகள் இருக்கத்தான் செய்யும். பணிபுரியும் இடத்தில் சக பணியாளர்களால் சிறு பிரச்சினை ஏற்படலாம். ஒரு கடனை அடைக்க மற்றொரு கடன் வாங்கும் சூழ்நிலை வரலாம். தொழில் தொடங்கும் முயற்சி தாமதமாகலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**மகர - சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அவர் அங்குள்ள சனியோடு இணைவதால் சுப விரயங்கள் ஏற்படும். பெண் வழிப் பிரச்சினைகள் தீரும். புதிய வாய்ப்புகள் தேடி வரலாம். தொழில் ரீதியான ஒப்பந்தங்கள் வரும்பொழுது அதை பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் இராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். எனவே பிள்ளைகளின் திருமணம் கைகூடலாம். பாகப் பிரிவினையில் இருந்த தடை அகலும். ஆபரணச் சேர்க்கை உண்டு.

## தேவைக்கேற்ற பணம் வந்து சேரும்

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

மாசி 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ்வாய், அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதோடு, அங்குள்ள சனியோடு இணைவதால் மிகவும் கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரம் இது. குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்படும். வாகனங்களில் செல்லும் பொழுது கவனம் தேவை. புதிய வாகனங்கள் வாங்க முயற்சிப்பீர்கள். தைரியமும்,




தன்னம்பிக்கையும் குறையும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு கிடைத்தாலும் சில காரியங்களை முடிக்க இயலாது.

**கும்ப - புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிநாதனாகவும், சுகஸ்தானாதிபதியாகவும் விளங்கும் புதன் மாசி 17 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செல்கிறார். 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் புதனால், ஒரு சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட நாட்களாக முயற்சித்தும் கிடைக்காத வேலை இப்பொழுது கிடைக்கும். நிகழ்காலத் தேவைகள் ஒவ்வொன்றாகப் பூர்த்தியாகும். தந்தை வழி உறவில் இருந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள்.

இம்மாதம் அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

உடல்நலத்தில் கவனம் தேவைப்படும் மாதம் இது. அலைச்சலைக் குறைத்துக் கொள்ளுங்கள். அதிகார வர்க்கத்தினரை பகைத்துக் கொள்ள வேண்டாம். கணவன் - மனைவிக்குள் அன்பும், ஆதரவும் அதிகரிக்கும். இனிமை தரும் விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படும். சுப விரயங்கள் உண்டு. பிள்ளைகளை உங்கள் கண்காணிப்பில் வைத்துக் கொள்வது நல்லது. பணிபுரியும் இடத்தில்கேட்ட சலுகைகள்கிடைக்கும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**பொதுநலத்தில் அக்கறை செலுத்தி புகழ் குவிக்கும் கடக இராசி வாசகர்களே!**

மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் கண்டகச் சனியின் ஆதிக்கமும், அஷ்டமத்து குருவின் ஆதிக்கமும் இருக்கிறது. எனவே எதிலும் நிதானத்துடன் செயற்படுங்கள். வரவை விட செலவு கூடும்.

## வரவை விட செலவு கூடும்

**ராகு-கேது ஆதிக்கம்**

உங்கள் இராசிக்கு 11 ஆம் இடத்தில் ராகுவும், 5 ஆம் இடத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். லாபஸ்தானத்தில் ராகு சஞ்சரிப்பதால் தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். என்றாலும் சனியின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் வீண் விரயங்களும் ஏற்படும். இந்த மாதத்தில் மனக்குழப்பம் அதிகரிக்கும். திட்டமிட்டு எதையும் செய்ய இயலாது.

நம்பிக்கைக்குரிய நண்பர்கள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பண விடயத்தில் பிறருக்கு பொறுப்புச் சொல்வதாலும் பிள்ளைகளாலும் சில பிரச்சினைகள் உருவாகும்.

**மகர-சுக்கிரன் சஞ்சாரம்**

மாசி மாதம் 14 ஆம் திகதி, மகர இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அங்கு சப்தமாதிபதி சனியோடும், விரயாதிபதி புதனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே மனைவி, பிள்ளைகள் வழியிலும், சகோதரர் வழியிலும் விரயங்களைச் சந்திக்க நேரிடும். குடும்பத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். மேலும் இல்லத்தில் நடைபெறும் சுபச்சடங்குகளுக்கும் செலவிடுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம். வீடு மாற்றம் வேதனை தரலாம்.

**உச்ச செவ்வாய் சஞ்சாரம்**

மாசி 14 ஆம் திகதி மகர இராசிக்குச் செல்லும் செவ்வாய், அங்கு உச்சம் பெறுகிறார். பலம் பெற்ற கிரகமான செவ்வாய், மகரத்தில் உள்ள சனியோடு சேர்ந்து உங்கள் இராசியைப் பார்ப்பதால் மிகுந்த கவனம் தேவை. எவ்வளவுதான் விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டாலும், நடப்பதை தவிர்க்க இயலாது. அண்டை, அயலாருடன் சச்சரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வீண்பழி விழலாம். வெளிநாட்டு அழைப்புகளை நம்பிப் போக வேண்டாம்.




**கும்ப - புதன் சஞ்சாரம்**

மாசி 17 ஆம் திகதி, கும்ப இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன், அஷ்டமத்தில் அடியெடுத்து வைப்பது நன்மைதான். மறைவிடத்திற்கு அதிபதியாக உள்ள கிரகங்கள், ஒவ்வொன்றாக இணையும் பொழுது நிறைவான பலன் கிடைக்கும்.

'விபரீத ராஜயோக' அடிப்படையில் இந்த பலன்கள் வந்துசேரும். பொருளாதார நிலை உயரும். தொழில் வெற்றி நடைபோடும். எதிரிகள் பலம் குறையும். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பூமி வாங்கும் யோகம் முதல், ஆபரணம் வாங்கும் யோகம் வரை நிறைவேறும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குருதட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

கண்டகச் சனியும், அஷ்டமத்து குருவும் ஆதிக்கம் செலுத்துவதால், எந்தக் காரியத்தைச் செய்தாலும் யோசித்துச் செய்வது நல்லது. உடல் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பணம் வந்த மறுநிமிடமே செலவாகிவிடலாம். கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம். பணிபுரியும் பெண்களுக்கு திருப்தி இல்லாத சூழ்நிலையும், புதிய வேலையில் சேர தாமதமும் ஏற்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர நிலைமை ஏற்பட்டால் உக்ரேய்னில் இருந்து இலங்கையர்கள் வெளியேற்றப்படுவர்

## இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

உக்ரேய்னில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்படுவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

உக்ரேய்னில் நிலவி வரும் பதற்ற நிலைமையினால் அநேக நாடுகள் தங்கள் நாட்டு பிரஜைகளை அந்நாட்டை விட்டு வெளியேறுமாறு பணித்துள்ளன.

எவ்வாறெனினும் இலங்கையர்களுக்கு அவ்வாறான அறிவுறுத்தல்கள் எதனையும் அரசாங்கம் இதுவரையில் வழங்கவில்லை.

உக்ரேய்னில் சுமார் நாற்பது இலங்கை மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவசர நிலைமை ஏற்பட்டால் உக்ரேய்னிலிருந்து இலங்கையர்களை வெளியேற்றிக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# முடிவுக்கு வந்தது சீமெந்திற்கான தட்டுப்பாடு

(கொழும்பு)

சீமெந்திற்கான தட்டுப்பாடு தற்போது முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கோதுமை மா போன்ற பொருட்களுக்கான தட்டுப்பாடு விரைவில் நீக்கப்படும் என துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

தற்போது துறை முகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசியப் பொருட்களுக்கு தாமதக்கட்டணம் இன்றி விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பண்டிகைக் காலத்தில் பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் குறிப்பிட்டார். (நி)



# மண்திட்டு சரிந்து விழுந்து மூவர் மருத்துவமனையில்

(பதுளை)

பாரிய மண்திட்டு சரிந்து வீழ்ந்து வீடு ஒன்று முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் அதில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் டிக்கோயா கிளங்கன் ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் மஸ்கெலியாவில் நேற்று முன்தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வீட்டின் பின்பக்கமாக இருந்த மண்திட்டே இவ்வாறு சரிந்து வீழ்ந்துள்ளது. (நி)

## விருந்தகத்தில் தீ ஒருவர் பலி

(நுவரெலியா)

லிந்துலையில் விருந்தகம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 72 வயதான ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விருந்தகத்தின் சமயலறையில் அவர், பணியாற்றிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவரது ஆடையில் தீப்பற்றியதால் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 31,600 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு

(கொழும்பு)

பெரும் போக நெல் அறுவடை தற்போது நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

இந்த பருவத்தில் இதுவரை 31,600 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இருந்து அதிகளவில் நெல் கொள்வனவு



செய்யப்பட்டுள்ளதாக சபையின் தலைவர் நீல் டி அல்விஸ் தெரிவித்தார்.

நாட்டு நெல் ஒரு கிலோ 90 ரூபாவுக்கும், சம்பா நெல் 92 ரூபாவுக்கும், கீரி சம்பா 95 ரூபாவுக்கும் நெல் சந்தைப்படுத்தல் அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்படுகிறது. (நி)

# இன்று ஒரு தகவல்

## வெவ்வேறு கோணங்கள் வித்தியாசப் பார்வைகள்

ஒரு திசை காட்டு கருவியை உரிய கோணத்திலிருந்து பார்த்ததால் தான் எது எது எந்தெந்த திசை என்கின்ற உண்மை தெரிய வரும்.

எந்த கோணத்தில் இருந்து காண வேண்டும் நம் நிலை சரிதானா? என்றெல்லாம் பாராமல் ஒரு திசை காட்டும் கருவியை எட்டுப்பேர் சுற்றி நின்று பார்க்கும் நிலையே இன்று பலருடைய நிலை.

இவர்களுள் ஒருவரது நிலையே சரியானதாக இருக்கும். இதில் வேடிக்கை என்னவென்றால், அவரும் அதை உணராதவராக இருக்க மாட்டார்.

இன்னும் எளிமையாக சொல்ல வேண்டுமானால், யானையை தொட்டுப்பார்த்த ஐந்து குருடர்களின் கதையே இன்று பலருடைய நிலை.

எதிரெதிராக வந்து மோதிக்கொள்ளும் இருவர், நீ செய்தது தான் தவறு என்று ஒருவரை ஒருவர் மாற்றி மாற்றி குற்றம் சாட்டிக்கொண்டிருப்பார்கள்.

இந்த உதாரணம் நடைமுறை வாழ்க்கையிலும் பொருந்துவதாக இருக்கின்றது. ஒவ்வொருவரும் தங்கள் கோணத்தில் இருந்து பார்க்கும் போதெல்லாம் தாங்கள் செய்வதே நூற்றுக்கு நூறு சரி என்று எண்ணுகிறார்கள். அதில் உள்ள தவறை உணராமல், தங்களது வாதத் திறமையால் தங்களை நியாயவாதிகளாகவும் ஆக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

அதோடு விடுகிறார்களா?

ஒவ்வொருவரும் தன் சொற்படி நடக்க வேண்டும் எனவும் விரும்புகிறார்கள்.

இத்தகைய மனப்பான்மை நிலவுவதால் தான் வாக்குவாதங்களும் சர்ச்சைகளும் பெருத்து வருகின்றன. ஒருவருடன் ஒருவர் ஒத்துப்போவது என்பது சாத்தியப்படாமல் போகிறது.

ஐந்து விரல்களும் ஒரே மாதிரியாய் இருப்பதில்லை.

இவற்றிலிருந்து இரு உண்மைகள் மிகத் தெளிவாகத் தெரியவருகின்றன.

அதாவது,

எல்லோரும் தம்முடைய கருத்துக்கு உட்பட வேண்டும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

இன்னொன்று,

நம்முடைய செயலிலும் முடிவிலும் பார்வைக் கோணத்திலும் கவுக் (கண் பார்வையல்ல) கோளாறு இருக்கலாம் என்பது ஒவ்வொருவருடைய மன வளமும் மனநிலையும் அவரவர் வளர்க்கப்பட்ட விதத்தை ஒட்டியும் பரம்பரைத்தன்மையை ஒட்டியும் கல்வியறிவு–உலக அறிவை ஒட்டியும் பக்குவப்படுகின்றன. அல்லது பண்படாமல் போகின்றன.

இந் நிலையில்,

உங்கள் அன்புக்குட்பட்டவர் என்றால் மட்டுமே அவர்களை உங்கள் வழிக்குக் கொண்டுவரும் முயற்சியில் இறங்க வேண்டும்.

முன்பின் தெரியாதவர், அல்லது அறிமுக மிருந்தும் நம்முடைய அக்கறைக்கு அப்பாற்பட்டவர் ஆகியோரெல்லாம் உங்கள் வழியில் நடக்க வேண்டும் என்றோ, உங்கள் கருத்தோடு உடன்பட வேண்டுமென்றோ எதிர்பார்த்து ஏமாந்து விரக்தியடையாதீர்கள் .

அதேநேரத்தில், சுயநல நோக்கோடு ஒரு முடிவுக்கு வந்து அதை நியாயப்படுத்தும் முயற்சியிலும் இறங்க வேண்டாம்.

இவ்விதிகள் பின்பற்றப்பட்டால் வாழ்வின் பெரும் பகுதிக் கசப்புச் சம்பவங்கள் குறையும்.

வாழ்வு இனிக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## இரு பெண்களும் ஒரு கிழவனும்

அப்போது “என் அன்பான குழந்தையே உன் அற்புதமான மனதுக்கு அற்புதமான விடயங்கள் எல்லாம் உனக்குக் கிடைக்கும்” என்று ஆசிர்வதித்தார். பின், அவளை ஆற்றுக்கு மறுகரையில் உள்ள காட்டுக்குச் செல்லும்படி வழிகாட்டினார்.

“அங்கே இரண்டு மரங்கள் இருக்கும், ஒன்றில் கெட்டுப் போன பழங்களும் மற்றொன்றில் பொன்னிறமான பழங்களும் தொங்கிக் கொண்டிருக்கும். பொன்னிற பழங்களை நீ தொடவே கூடாது. அதற்குப் பக்கத்தில் உள்ள மற்றொரு மரத்திலிருந்து ஒரு கெட்டுப் போன பழத்தை எடு த்துக்கொள். நீ வீட் டுக்குப் போனதும் அதை உடைத்துப் பார்” என்றார்

ரந்தி கிழவர் சொன்னபடியே காட்டுக்குள் சென்று பழத்தை எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தாள். அவள் அந்தப்பழத்தை உடைத்தபோது அவள் கற்பனையே செய்து பார்க்க முடியாத பொருட்கள் அதிலிருந்து தோன்றி, அறையின் மூலைமுடுக்கெல்லாம் நிறைந்து விட்டன.

பிசி வந்து ரந்தியிடம் உள்ள பொருட்களை எல்லாம் பார்த்து விட்டு, பொறாமையுடன் “இவை எல்லாம் உனக்கு எப்படிக் கிடைத்தன?” எனக் கேட்டாள். ரந்தி தனக்கு எப்படி அவை கிடைத்தன என்பதை அவளுக்கு அப்படியே சொல்லி விட்டாள்.



மறுநாள் காலை தாமதமாக எழுந்த பிசி விடிந்து பல மணிநேரம் கழிந்த நிலையில் ரந்தி தண்ணீர் எடுக்கும் ஆற்றங்கரைப் பகுதிக்குச் சென்றாள். அப்போதும் அங்கு அந்தக் கிழவர் உட்கார்ந்திருந்தார். பிசி அவரிடம் போய் ரந்தி சொன்னதை விபரித்து விட்டு “அந்த மாயாஜாலத் தோட்டத்திற்கு எப்படிப் போவது?” என்று கேட்டாள். அந்த கிழவர் அவளுக்கும் வழியைச் சொல்லி “அங்கிருக்கும் கெட்டுப் போன பழங்களில் ஒன்றை எடுத்துக் கொள். பொன்னிறப் பழங்களைத் தொட்டு விடாதே” என்று கூறி அனுப்பி வைத்தார். உடனே காட்டுக்குள் சென்ற பிசி கெட்டுப் போன பழங்களுடனும் பொன்னிறப் பழங்களுடனும் உள்ள மரங்களைக் கண்டாள். “இந்தக் கிழவன் என்னை முட்டாள் என்று நினைத்துவிட்டானா? இந்த பொன்னிறப் பழங்கள் எல்லாம் எனக்குத்தான்” என்று மனதுக்குள் கூறிக்கொண்ட பிசி கை நிறையப் பொன்னிறப் பழங்களை அள்ளிக் கொண்டு வீட்டுக்கு ஓடிவந்தாள்.

வீட்டுக்கு வந்து நேராக தனது படுக்கை அறைக்குச் சென்றாள். யாரும் தனக்குக் கிடைக்கப் போகும் அபூர்வமான பொருட்களைப் பார்த்துவிடக்கூடாது என்று அறையின் கதவையும் மூடிக்கொண்டாள். பிறகு தன்னிடமிருந்த பொன்னிறப் பழங்களை உடைப்பதற்காக அப்படியே சுவரில் வீசி எறிந்தாள். உடைந்த பழங்களில் இருந்து அபூர்வமான பொருட்களுக்குப் பதிலாக பாம்புகளும் புழுக்களும் பெருச்சாளிகளும் என விதவிதமான கொடிய உயிர்கள் ஏராளமாகத் தோன்றி அறை முழுக்கப் பரவின.

(முற்றும்)

# கம்பராமாயணம்

## பாலகாண்டம்




குருதி கொப்பளித்தது; அதில் அவள் நீராடினாள். செக்கர் வானம் தரையில் சாய்ந்ததைப் போல அவள் தரையில் விழுந்தாள். மை வண்ண அரக்கி, செவ்வண்ணச் சிலையாக நிலை மாறினாள்.

கறுப்பி என்று பேசப்பட்டவள் செவ்வலரி மலரானாள். மண் சிவந்தது; அதில் அவள் கண் சிவந்து துடித்துக் கதறினாள்; அந்த ஒலி யானையின் பிளிறல்போல் நாற்புறமும் சிதறியது.

இராவணனது கொடிக் கம்பம் சாய்ந்ததைப் போல இந்தக் கொடிய கம்பம் கீழே விழுந்தது. இராவணன் அழிவை முன்கூட்டி அறிவிப்பதுபோல் இந்தச் சாய்வு காணப்பட்டது.

மக்கள் புரட்சி முன் கொடுங்கோல் மன்னன், ஆட்சி இழந்து வீழ்ச்சி உற்று அலங்கோலம் அடைவதைப் போல இக்கோர அரக்கி பிணக்கோலம் கொண்டாள் இதைக் கண்ட வானவர் ஆரவாரித்தனர்; மகிழ்ச்சி அடைந்தனர். தீமை அழியவும், அறம் தழைக்கவும் இராமன் சரம் செயற்பட்டதை அறிந்து அவர்கள் ஆசி கூறினர்.

“மாவீரன்” இவன் என்று தேவேந்திரன் பாராட்டினான். தேவர்கள் தெய்வப் படைக் கருவிகள் சிலவற்றை ஏற்கனவே விசுவாமித்திர முனிவரிடம் ஒப்படைத்து இருந்தனர்; அவற்றைத் தக்கவனிடம் சேர்க்கச் சொல்லி அறிவித்திருந்தனர்; “தக்கோன் இவனே” என்று சொல்லி மிக்கோன் ஆகிய முனிவரிடம் “அப்படைகளை இராமனிடம் தருக” என்று அறிவித்தனர்.

மாமுனிவனும் தேவர்களின் ஏவல் கேட்டுக் காவல் மன்னன் ஆகிய இராமனுக்குப் படைக் கருவிகளைத் தந்தான்; அவற்றோடு எய்யும் ஆற்றையும் கற்பித்தான். அரிய படைப்பயிற்சி அவனுக்குக் கிடைத்தது. ஆற்றல்மிக்க படைக் கருவிகள் அவனை அடைந்தன.

### தவவேள்வி

தாடகை தரையில் பட இராமன் வில்லை வளைத்தான்; இது அவனுக்கு வெற்றியைத் தந்தது; அவன் வீரம் பாராட்டப்பட்டது; எனினும், “அவன் ஒரு பெண்ணைக் கொலை செய்தான்” என்ற பெரும் பழியும் அவனைச் சூழ்ந்தது.

இதைக் கூனி கைகேயிடம் உரையாடலில் குறிப்பிடுகிறாள். இராமன் பெருமையை உலகம் பேச, அவன் சிறுமையைக் கூனி ஏசக் காண்கிறோம். “தாடகை என்னும் தையலாள் படக் கோடிய வரிசிலை இராமன்” என்று வன்பழிக் கூறி கைகேயிக்கு அவன்பால் உள்ள அன்பை அழிக்கிறாள் கூனி.

தாடகையின் வீழ்ச்சி, அரக்கர்களின் தாழ்ச்சிக்கு ஆரம்பநிலை; அவர்கள் அழிவுக்குப் பிள்ளையார் சுழி, இனி அடுத்து அவள் மைந்தர்கள் சுபாகுவும் மாரீசனும் இராமனை எதிர்க்கின்றனர். அதற்கு உரிய சூழல் உருவாகியது.

### வேள்வி காத்தமை

கடமையை முடித்துக் கொண்டு காகுத்தன், அந்த இடத்தை விட்டுச் சில யோசனை தூரம் நடந்து சென்றான். மூவரும் அழகிய பசுஞ்சோலை ஒன்றினைக் கண்டனர். அதன் பழைய வரலாறு மாமுனிவன் கூற, இருவரும் செவிமடுத்தனர். “அந்த இடத்தில் திருமால் இருந்து தவம் செய்தார்” என்ற கதை பேசப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்க வேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக் கொள்ள வேண்டும். – ஃபிராங்கிலின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆன்டி இண்டியன் என்ற படத்தைப் பார்க்க வேண்டும்

ஆன்டி இண்டியன் (Anti Indian) என்ற திரைப்படத்தை அண்மையில் பார்க்கின்ற சந்தர்ப்பம் கிடைத்தது.

மதங்கள் எவ்வாறு முட்டி மோதிக் கொள்கின்றன என்பதற்கு அந்தத் திரைப்படத்தை விஞ்சக்கூடிய கருப்பொருள் இல்லை எனலாம்.

இதை நாம் கூறுவதற்காக, திரைப்படத்தைப் பார்க்க வைப்பதற்குப் பிரசாரம் செய்வதாக யாரும கருதிவிடாதீர்கள்.

இப்படித்தான் ஒருமுறை "சாட்டை", "பரியேறும் பெருமாள்" என்ற திரைப்படங்களை நம் மக்கள் பார்க்க வேண்டும் என இவ்விடத்தில் எழுதியிருந்தோம்.

அது தொடர்பில் கருத்துரைத்த நம் நண்பர் ஒருவர்; திரைப்படங்களைப் பார்க்கும்படி கூறுவது சமுதாயப் பணியா? என்று எம்மிடம் கேட்டிருந்தார்.

திரைப்படங்கள் எல்லாமுமே கற்பனையும் சமூக விழுமியங்களைச் சிதைப்பவையுமல்ல.

சமூக சீர்திருத்தங்களை, அடக்குமுறைகளை, மதபேதங்களால் ஏற்படக்கூடிய வஞ்சனைகளை எடுத்துக் காட்டுகின்ற சமூக நலன் சார்ந்த திரைப்படங்களும் உண்டு.

அவ்வாறான திரைப்படங்களைப் பார்ப்பது ஓர் இதிகாசக் கதையைப் படிப்பதற்கு ஒப்பானதென்பது நம் தாழ்மையான கருத்து.

அந்தவகையில், ஆன்டி இண்டியன் திரைப்படத்தை நம் மக்கள் பார்க்க வேண்டுமென்பது நம் தாழ்மையான கோரிக்கை என்பதோடு அந்தப் படத்தின் கருப்பொருளை எடுத்தியம்பாமல் விட்டு விடுகின்றோம்.

எனினும் அந்தப் படத்தில் வருகின்ற "மதத்தை நம்புபவன் கோபிக்க மாட்டான். மதத்தை நம்பிப் பிழைப்பவன் கோபிப்பான்" என்ற வசனம் மிக உயர்ந்த தத்துவத்தைத் தந்து நிற்கிறது.

இப்போது இலங்கையில் சில மதவாதிகள் கோபமடைவதிலும் கோபப்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இது எதற்காக? என்பதுதான் தெரியவில்லை.

மதங்கள் மக்களை வழிப்படுத்துவதற்கானவை. மானிடம் உள்ளிட்ட அத்தனை ஜீவராசிகள் மீதும் அன்பும் இரக்கமும் காட்ட வேண்டும் என்பதை வலியுறுத்துபவை.

ஆனால் மதங்களின் அந்த உயர்ந்த சிந்தனை அடியோடு வெட்டி வீழ்த்தப்பட்டு மதத்தைப் பரப்புகின்ற – மத மாற்றம் செய்கின்ற – மத அடையாளங்களை நிறுவுகின்ற வன்முறைத் தனங்களில் ஈடுபடுபவர்களைக் காண முடிகிறது.

பரவாயில்லை. இறைவன் என்றொருவன் இருப்பானாயின்; அவன் மீது நம்பிக்கை இருக்குமாயின், பிற சமயத்தவர்களை மனம் நோக வைத்து, பிற சமயத்தவர்களை வஞ்சித்து தம் மதத்தை வளர்க்கலாம் பரப்பலாம் என்று யார் நினைத்தாலும் அதற்கு இறைவன் ஒருபோதும் அனுமதிக்க மாட்டான்.

ஆக, கடவுள் மீது நம்பிக்கையில்லாமல் கடவுளை வைத்துச் சீவியம் நடத்துகின்ற மாபாவிகளே! மதத்தின் பேரால் மக்களை வஞ்சிப்பர்.

இத்தகையவர்கள் நிச்சயம் நரகத்தில் இடப்படுவர்.

### பல கூட்டங்கள் நடத்தியும்
## தீவுப் பகுதிக்கான போக்குவரத்து தொடர்பில் தீர்வு கிடைக்கவில்லை
### யாழ். அரச அதிபர் மகேசன்

(யாழ்ப்பாணம்)

தீவுப் பகுதிக்கான பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் தடைகள் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் பலதரப்பட்ட கூட்டங்களை நடத்தியும் அதற்கு தீர்வு கிடைக்கவில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தீவக பொது போக்குவரத்து அடிக்கடி படகுகள் பழுதடைவதன் காரணத்தினால் தடைப்படுகின்றது. அதேநேரம் பொது மக்கள் மிகவும் ஆபத்தான கடல் பயணங்களை மேற்கொள்ளும் போது பயண நிலையானது மிகவும் அபாயமாக காணப்படுகிறது.

தீவகத்திற்கான பொதுப் போக்குவரத்து தொடர்பில் பல தடவைகள் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம். இந்த தீவக போக்குவரத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பாக இருந்து அவர்கள் படகுகள், பாதை மற்றும் குமுதினி படகு போன்றவற்றை இயக்கி வருகிறார்கள்.

குமுதினி படகு பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. அதேபோல நெடுந்தாரகை, வடதாரகை, சமுத்திரா போன்ற படகுகள் பிரதேச சபையினரால் கூட்டுறவு அமைப்பினரால் இயக்கப்படுகிறது குறிப்பிடத்தக்கது. (ம-33,104)

### எரிபொருளுக்கு வரிச்சலுக்க அவசியம்
## பெற்றோலிய கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

எரிபொருளுக்கான வரிச்சலுகை அல்லது எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் தற்போதைய விலையினை தொடர்ந்தும் பேணுவதால் ஏற்படும் பாரிய நட்டத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமே சுமப்பதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் நிதியின்மையினால் எதிர்வரும் காலங்களில் டொலரை பெற்றுக்கொள்வதும் சவாலானதாக மாறியுள்ளதாக எரிசக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

டொலர் இன்மையினால் எதிர்காலத்தில் நாட்டிற்கு தேவையான எரிபொருளை பெற்றுக் கொள்வதில் நெருக்கடி ஏற்படுமென அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலைமையை கருத்திற்கொண்டு உடனடியாக எரிபொருளுக்காக வரிச்சலுகையை வழங்க வேண்டும் அல்லது எரிபொருட்களின் விலையை அதிகரிக்க வேண்டுமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம)

## தீக்காயத்துக்குள்ளான கர்ப்பவதி மரணம்

(கரணவாய்)

தீக்காயத்திற்குள்ளான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த ஐந்து மாத கர்ப்பவதி ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் கரணவாய், மண்டான் பகுதியைச் சேர்ந்த மிதுனராஜ் மிதுனா (வயது- 29) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 6 ஆம் திகதி மேற்படி கர்ப்பவதி பெண் தீயில் எரிந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-60)

## கீரிமலை நகுலேஸ்வர ஆலய மஹோற்சவம் நாளை ஆரம்பம்

ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 16 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தேர்த் திருவிழாவும் அன்றையதினம் இரவு நான்கு சாமப் பூசையுடன் மகா சிவராத்திரி உற்சவம் சிறப்பாக இடம்பெறவுள்ளதுடன் மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தோற்சவமும் அன்றையதினம், மாலை 6 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம்பெறும் என மேற்படி ஆலய ஆதீனகர்த்தா ராஜ ராஜ ஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்துள்ளார். (ம-18)

## வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்த்திருவிழா

(கரணவாய்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பிலவ வருடத்துக்கான தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி அளவில் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணியளவில் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து வல்லிபுர மாயவன் காலை 9 மணியளவில் தேரில் ஆரோகணித்து வலம் வருவார். சமுத்திர தீர்த்தம் நாளை 16 ஆம் திகதி புதன்கிழமை மாசி மகத்தன்று பிற்பகல் 4 மணிக்கு கற்கோவளம் வங்கக்கடலில் இடம் பெறும். (ம-33,60,104)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### சுறுசுறுப்பாகத் திகழுங்கள்

❖ நெம்முடைய உடலையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிட வேண்டும்.

❖ பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றி பேசக்கூடாது. அப்படிச் செய்வதனால் நீங்கள் அவனுக்கு கேடு செய்வதுடன், உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

❖ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான், அவனே உலகில் நன்றாக வாழ தகுதியுள்ளவன்.

❖ எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை.

❖ கீழ்ப்படிதல், முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால், ஒருவன் வெற்றி பெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்க முடியாது.

❖ உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்ற மனிதர்களே. வீரம் மட்டுமிருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும்.

❖ இயந்திரங்கள் மனித சமூகத்திற்கு சுகத்தைக் கொடுத்தவையுமல்ல, கொடுக்கப் போவதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

77



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

### (சந்திர) மாதப்பிறப்பு

சந்திர மாதத்தைப் பயன்படுத்தும் முறைகளில் மாதத் தொடக்கம் கொள்வதில் இரண்டு முறைகள் கையாளப்படுகின்றன. ஒரு சில சமுதாயங்களில் அமாவாசையை மாதத் தொடக்கமாகக் கொள்ள, வேறு சில பண்பாடுகளில் பூரணையை மாதத் தொடக்கமாகக் கொள்கின்றன. முதல் முறை அமாந்த முறை என்றும், இரண்டாவது பூர்ணிமாந்த முறை என்றும் வழங்கப்படுகிறது.

பூர்ணி மாந்த முறையில் ஒவ்வொரு இடத்திற்கும் கணிக்கப்பட்ட சூரிய மாதத்தில் சந்திரன் பூரணை அடையும் நாள் எந்த நக்கத்திரத்தில் (நட்சத்திரத்தில்) வருகிறதோ அந்த நட்சத்திரத்தின் பெயரே சந்திர மாதப் பெயராகக் கொள்ளப்பட்டது. இப்படி, ஒவ்வொரு சூரிய மாதத்திற்கும் இணையான சந்திர மாதம் கணித்தனர். உதாரணமாக, ஒரு இடத்தில் சூரியன் மேட இராசியில் பயணம் செய்யும் போது சந்திரன் பூரணை அடையும் நாளில் பங்குனி நட்சத்திரம் வந்தால் சூரிய மாதமான மேட மாதத்திற்கு உரிய சந்திர மாதம் பங்குனியாகக் கொள்வர். வட இந்தியாவில் பெரும்பாலும் சந்திர மாதமே புழக்கத்தில் உள்ளது. இஸ்லாமியர்களும் இம்முறையையே கடைப்பிடித்து வருகிறார்கள்.

### தமிழர் புத்தாண்டு

சந்திர மாதத்தை வைத்து வருடத்தைக்கணக்கிட்டால், 12 மாதங்களுக்கு மொத்தம் 354 நாட்கள் 20 நாழிகைகள் 1 விநாடி 36 தற்பரைகள் ஆகும். இதன் மதிப்பு வருடத்திற்கு வருடம் ஏற்ற இறக்கம் கொண்டது. மேலும், பூமி சூரியனை சுற்றிவருவதால் தான் பூமியில் இயற்கையாக பெரும் பொழுதுகள் உருவாகின்றன.

ஆகவே, ஒரு இளவேனில் காலத் தொடக்கத்திற்கும் அடுத்த இளவேனில் காலத் தொடக்கத்திற்கும் இடையில் உள்ளகாலம் (ஒரு வருடம்) 365 நாட்கள் 15 நாழிகைகள் 31 விநாடிகள் 15 தற்பரைகள்ஆகும். இது சந்திரன் 12 முறை பூமியைச் சுற்றிவரும் மொத்த காலத்தை விட 11 நாட்கள் கூடுதலாகும். ஆகையால், சந்திரனின் இயக்கத்தை வைத்து வருடத்தைக் கணக்கிடும் பொழுது, பூமியில் இயற்கையாக நிகழும் பெரும் பொழுதுகளின் தொடக்கத்தையும் முடிவையும் எளிதாகக் கணக்கிட முடியாது. ஏனென்றால், அவை பூமி சூரியனைச் சுற்றுவதால் தோன்றுபவை.

இதனால், சந்திரனின் இயக்கத்தை வைத்து வருடத்தைக் கணக்கிட்டால், அடிக்கடி நாட்காட்டியை மாற்றியமைக்க வேண்டும். ஆகையால், பொது மக்களின் அன்றாட வாழ்வில் புதுவருடத்தைக் கணிக்க இம் முறை உதவாது. ஆனால், தோராயமாக புதுவருடத்தின் வருகையைக் கணக்கிடலாம். இதனால், தமிழர் பூமி சார்ந்த சூரியனின் இயக்கத்தை வைத்து புதுவருடத்தின் தொடக்கத்தையும் பெரும் பொழுதுகளின் தொடக்கத்தையும் சூரிய மாதங்களையும் அறிவியல் பூர்வமாகக் கணித்தனர்.

அக் காலத்தில் கணியர், வள்ளுவர் போன்றவர்கள் காலத்தைக் கணிப்பதில் வல்லவர்களாக இருந்தார்கள். ஆனால், சாதாரண பொது மக்கள் தங்கள் அன்றாட வாழ்விற்கு (முக்கியமான விடயங்களைத் தவிர) பெரும் பொழுதுகளை ஓரளவிற்குக் கணக்கிட முடிந்தாலும் சூரியனை வைத்து சூரியமாதத் தொடக்கத்தையும் நாட்களையும் கணிப்பது கடினமாக இருந்தது.

ஆகையால், அன்றாட வாழ்விற்குத் தோராயமாக நாட்களையும் மாதங்களையும் குறிக்க மட்டும் சந்திரனைப் பயன்படுத்தினர். சந்திரன் ஒரு பூரணையிலிருந்து அடுத்த பூரணைக்கு செல்லும் காலம் தங்கள் அன்றாடவாழ்வில் ஒரு மாதமாகக் கொண்டனர். பூரணையில் என்ன நக்கத்திரம் வருகிறதோ அந்நக்கத்திரத்தின் பெயரே அச் சந்திர மாதத்தின் பெயராகக் கொள்ளப்பட்டது.

உதாரணமாக, தலைவன் தலைவியிடம் சந்திரமாதத்தில் சித்திரை மாதம் பூரணை அன்று திரும்பி வருவேன் என்றுக் கூறினால், சித்திரை மாத பூரணையைக் கண்டுபிடிப்பது எளிதாக இருக்கும். இதே, தலைவன் தலைவியிடம் சூரியமாதத்தில் கூற முயன்றால் மேட மாதத்தில் திரும்பி வருவதாக மட்டுமே கூறமுடியும்.

முடிந்தால், மேடமாத பூரணையில் வந்துவிடுவேன் எனக்கூற முடியும். ஆனால், சூரியமாதத்தின் தொடக்கத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்தது. இதனால், அன்றாட வாழ்விற்குத் தோராயமாக நாட்களையும் மாதங்களையும் குறிக்க மட்டும் சந்திரனைப் பயன்படுத்தினர்.

ஆனால், சூரியனின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கலைகளான சோதிடம், ஓரைபார்த்தல், சாதகம்பார்த்தல், முதலிய கலைகளுக்கு சூரிய மாதத்தைக் கணித்துப் பயன்படுத்தினர்.

இதன் மூலம், தமிழர் பூமி சார்ந்த சூரியனின் இயக்கத்தை வைத்தே புதுவருடத்தைக் கணித்தனர் எனத் தெரிகிறது. பூமி சார்ந்த சூரியனின் இயக்கத்தில், சூரியனின் தெற்கு-வடக்கு நகர்வு அயன நகர்வு எனப்படும். அயன நகர்வின் பொழுது பூமிசார்ந்த சூரியனின் இயக்கம் தெற்கிற்கும் வடக்கிற்கும் (கடக ரேகை) சென்றுவரும்.

அப்படி ஒரு முறை தெற்கிலிருந்து வடக்கிற்குச் செல்லும் காலம், ஒரு அயனம் ஆகும். இரு அயனங்கள் சேர்ந்தது ஒரு வருடமாகும். ஒரு வருடத்தில் இரண்டு முறை சூரியன் வான் உச்சிக்குவரும். அதில் ஒன்று இளவேனிற்காலத்தின் (வசந்த காலத்தின்) தொடக்கத்தைக் குறிக்கும். இளவேனிற் காலம் தொடங்கும் அந்நாளே ஆண்டின் தொடக்கமாகக் கொள்ளப்பட்டது. வேளாண் தொழிலை அடிப்படையாக வைத்தே இளவேனிற் காலத்தின் தொடக்கம் ஆண்டின் தொடக்கமாகக்கொள்ளப்பட்டது.

மேலும், இந்நாளில், பகலும் இரவும் சமநீளம் கொண்டதாக இருக்கும். இந்நாளே, சூரிய மாதங்களில் (இராசிச் சக்கரத்தின்) முதல் மாதத்தின் தொடக்கமாகக் கொள்ளப்பட்டது. இதன் மூலம், இடம், காலம் மற்றும் செயல் ஆகிய மூன்றினை அடிப்படையாக வைத்து தமிழர் காலத்தைக் கணித்தனர் எனத் தெரிகிறது.

### புத்தாண்டுக் குழப்பம்

தமிழர் புத்தாண்டு தை என்றும், சித்திரை என்றும், ஆவணி என்றும் வெவ்வேறு விதமாகக் கூறுவர். முதல் சூரியமாதமான மேட மாதத்திற்குள் சூரியன் நுழையும் நாள் வருடப்பிறப்பாகுவதால், வருடப் பிறப்பு, சித்திரை சந்திர மாதத்தில் நடைபெறுகிறது என சிலரும், தை மாதப் பிறப்பு தமிழரின் திருநாளான பொங்கல் திரு நாள் என்பதால் தைமாதம் தான் வருடப் பிறப்பு எனவும் வெவ்வேறாகக் கூறுவர்.

இந்துக் காலக் கணிப்பு முறையில், இரவு-பகல், வாரநாட்கள், மாதங்கள் போல ஆண்டுகளும் சுழற்சி முறையில் அமைந்துள்ளன. இந்த ஆண்டு வட்டம் ஒவ்வொன்றும் 60 ஆண்டுகளைக் கொண்டது. இதிலுள்ள ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித்தனிப் பெயர்கள் உண்டு. உதாரணமாக பிரபவ ஆண்டில் தொடங்கி அட்சய ஆண்டில் ஒரு சுற்று நிறைவடைந்ததும் மீண்டும் இன்னொரு பிரபவ ஆண்டில் அடுத்த வட்டம் ஆரம்பமாகும்.

### நாழிகை

நாழிகை என்பது பண்டைய கால நேர அளவாகும். தமிழர் இந்தக் கால அளவை முறையைப் பயன்படுத்தினர். தற்பொழுது, பெரும் பாலும் சோதிடம், பஞ்சாங்கம் முதலியவற்றில் பயன்படுத்தும் 24 நிமிடங்கள் கொண்ட ஒரு கால அளவு. பகல் முப்பது நாழிகை இரவு முப்பது நாழிகை. எனவே, ஒருநாளில் (பகல் + இரவு சேர்ந்து) அறுபது நாழிகைகள் உள்ளன.

### நாழிகை அறிதல்

பண்டைக் காலத்தில் பானையில் குறையும் நீர் போக எஞ்சிய நீர் நிற்கும் நீரின் அளவைக் கொண்டு நாழிகையைக் கணக்கிட்டுச் சொல்லும் நாழிகைக் கணக்கர் அரசவையில் இருந்தனர். பொது மக்கள் தன் நிழலைத்தானே அளந்து பார்த்துக் காலத்தைக் கணித்துக் கொண்டனர். சிலர் காட்டுப் புல்லை நிறுத்தியும் நாழிகையைக் கணக்கிட்டு வந்தனர். இரவு வேளையில் குறிப்பிட்ட சில விண்மீன்களைப் பார்த்துக் காலத்தைக் கணித்தனர்.

**அயன நகர்வும் தமிழரின் பண்டிகைகளும்**

| அயன நகர்வு | சூரிய மாதம்/இராசி | தமிழர் பண்டிகை |
|---|---|---|
| சூரியன் வான் உச்சியில் வரத் தொடங்கும் மாதம் | மேடம் | தமிழ் புத்தாண்டு |
| சூரியன் வடக்கிலிருந்து (கடக ரேகையில்) தெற்கு திரும்பத் தொடங்கும் மாதம் (தேர்த் திரும்புதல்) | கர்க்கடகம் | ஆடிப்பிறப்பு |
| சூரியன் மீண்டும் வான் உச்சியில் வரத் தொடங்கும் மாதம் | துலாம் | ஓணம் பண்டிகை |
| சூரியன் தெற்கிலிருந்து வடக்கு திரும்பத் தொடங்கும் மாதம் (தேர்த் திரும்புதல்) | மகரம் | பொங்கல் திருநாள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடரும்...)

## 11 வயது மாண...

கொடிகாமம் மத்தியை சேர்ந்த 11 வயதுடைய வ.அஜய் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த வாரம் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் மாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவன் டெங்கு தாக்கத்திற்குள்ளாகியே உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-18,33,60,104)

## மேலும் 28...

திப்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற வளாகத்தில் கடந்த சில தினங்களாக கோவிட் அன்டிஜன் பரிசோதனை இடம்பெற்று வருகின்றது.

அதன் பிரகாரம் நேற்றைய தினமும் பரிசோதனை இடம்பெற்றுள்ளது. பாராளுமன்ற ஊழியர்கள் 112 பேர் கோவிட் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போதே அவர்களில் 28 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். (ம)

## நாட்டில் மேலும்...

டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,844 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ஊடகவியலாளர்...

திக சமரவிக்ரமவின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.10 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இனந்தெரியாத நான்கு நபர்கள் வெள்ளை வாகனத்தில் வந்து எனது வீட்டில் இருந்த பாதுகாவலரை துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் தங்கள் முகத்தை முழுவதுமாக மூடிக்கொண்டு உள்ளே நுழைந்தது வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளது.

மேலும் பல தடவைகள் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பல தடவைகள் தொலைபேசி ஊடாக தனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது தொடர்பில் எதிர்க்கட்சி உட்பட பல தரப்பினரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். (ம)

## சுகாதார தொழிற்...

சுகாதார தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

தமது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்கும் வரை தமது ஆர்ப்பாட்டத்தை கைவிடப் போவதில்லை என்றும் சுகாதார தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.

சம்பள முரண்பாட்டுக்கான தீர்வு உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து தாதியர் சங்கம், நிறைவுகாண் மருத்துவ சங்கம், மேலதிக மருத்துவ சேவைகள் சங்கம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் உள்ளிட்ட 18 சுகாதார தொழிற்சங்கங்கள் கடந்த 7ஆம் திகதி வேலை நிறுத்த போராட்டத்தினை ஆரம்பித்தன.

எவ்வாறிருப்பினும் வேலை நிறுத்த போராட்டம் தொடர்பில் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவிற்கமைய அரச தாதியர் சங்கம் போராட்டத்திலிருந்து விலகியுள்ள போதிலும், அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக வைத்திய சேவைகள் அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதன் பின்னணியில் ஏனைய 17 தொழிற்சங்கங்களும் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

வேலைநிறுத்தப் போராட்டம் குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கருத்து வெளியிடுகையில்,

வேலை நிறுத்த போராட்டம் விரைவில் நிறைவுக்கு வரும் என்று எதிர்பார்க்கின்றோம். சுகாதார அமைச்சர் என்ற ரீதியில் செய்யக்கூடிய விடயங்களை செய்ய முடியும் என்று கூறுவதைப் போன்றே, முடியாதவற்றை முடியாது என்றும் கூறுவேன் என்றார்.

சுகாதார அமைச்சரின் கருத்து தொடர்பில் சுகாதார நிபுணர்களின் மாநாட்டின் தலைவர் வைத்தியர் ரவி குமுதேஷ் தெரிவிக்கையில்,

"மூன்றரை மாதங்களாக பேச்சுவார்த்தைக்கு கோரிக்கை விடுத்தபோது அதற்கான சந்தர்ப்பத்தை வழங்காமல், தொடர் வேலை நிறுத்த போராட்டத்தினை அறிவித்த பின்னரே பேச்சுவார்த்தைக்கு வாய்ப்பளிக்கப்பட்டது.

எவ்வாறிருப்பினும் மறுபுறத்தில் போராட்டத்தினை முடக்குவதற்காக நீதிமன்றத்தில் தடையுத்தரவு பெறப்பட்டுள்ளதோடு, அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. போராட்டத்தை முடக்குவதற்கு முயற்சிக்காமல் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வினை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம் என்றார். (ம)

## ஓமிக்...

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது, கொழும்பு தேசிய மருத்துவ மனையின் மருத்துவ வல்லுநர் அன்டனி மெண்டிஸ் இதனைத் தெரிவித்தார்.

முகக்கவசம் அணிந்து வீட்டுக்குள்ளேயே தங்கியிருப்பதன் மூலம் ஒமிக்ரோன் மாறுபாட்டிலிருந்து பாதுகாக்கப்படுவார்கள் என எதிர்பார்ப்பது நகைப்புக்குரியது என்று அவர் குறிப்பிட்டார்.

இன்னும் ஒரு கோவிட் - தடுப்பூசியை கூட பெறாத நோயாளிகள் தீவிர சிகிச்சை பிரிவுகளில் சிகிச்சை பெறுகின்றனர் என்று மருத்துவ வல்லுநர் மெண்டிஸ் கூறினார்.

அத்தகைய நபர்கள் அனைவரும் தடுப்பூசி போடாமலேயே மற்ற கோவிட் வகைகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடிந்தது என்றும், இருப்பினும் கோவிட் - 19 தடுப்பூசியைப் பெறாமல் யாரும் ஒமிக்ரோன் மாறுபாட்டிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டினார். (ம)

### தன நிதானய

திகதி - 2022.02.14
சீட்டிழுப்பு இலக்கம் - 708
ஆங்கில எழுத்து: G | வெற்றி இலக்கங்கள்: 24 35 42 79
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 14.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2973
ஆங்கில எழுத்து: N | வெற்றி இலக்கங்கள்: 04 20 46 79
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2022/02/14
சீட்டிழுப்பு இலக்கம் 4678
ஆங்கில எழுத்து: B | வெல்லப்பட்ட இலக்கங்கள்: 0 4 5 2 9 4
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.14
சீட்டிழுப்பு இலக்கம் 0019
வெற்றி இலக்கினம்: மேடம் | வெற்றி இலக்கங்கள்: 31 38 40 55 | மேடம்
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 14/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1026
வெற்றி எழுத்து: T | சுப்பர் இலக்க: 13 | வெற்றி இலக்கங்கள்: 12 13 43 62

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1695 திகதி 2022.02.14
ஆங்கில எழுத்து: U | வெற்றி இலக்கங்கள்: 09 20 50 51
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1655 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2022 / 02 / 14 | தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: D 22 26 32 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- ரூபா 59,301,832/-
அபிவிருத்தி லொத்தர் சபை

### சனிதா

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.02.14
சீட்டிழுப்பு இல: 3816
வர்ணம்: நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.3,886,520/-
வெற்றி இலக்கங்கள்: 24 29 44 69 | ஆங்கில எழுத்து: X
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,787,847/-
திகதி 2022-02-14
சீட்டிழுப்பு வாரம் 3367
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்: 16 27 28 43 | மீனம்
3 4 8 9 6 7 3
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,629,660/-

### 12

சீட்டிழுப்பு வாரம் 831
வர்ணம் இள நீலம்
திகதி 2022.02.14 திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: F | சுப்பர் இலக்கம் 20 | 01 17 37 67
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 213,012,145/-
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda

சீட்டிழுப்பு வாரம் 1811
சீட்டிழுப்பு திகதி 2022 / 02 / 14
வெற்றி இலக்கங்கள்: 03 21 22 56 | ஆங்கில எழுத்து: W
ரூ. 100,000/- பரிசுக்கான விசேட இலக்கம் 4 7 3 2 5 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 31,504,288/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொலைபேசி: 0112 333546-47

### அத கோடிபதி ADA KOTIPATHI

திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1481
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.02.14
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,197,440/-
வெற்றி இலக்கங்கள்: 13 29 35 36 | ஆங்கில எழுத்து: Z
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வருகின்றார் ஜெய்சங்கர்

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர், மார்ச் மாதம் 18 அல்லது 20 ஆம் திகதி இலங்கை வரவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். (ம)

# 2 ஆயிரம்...

பக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச தலைமையில் அமைச்சரவை இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஊழியர் சேமலாப நிதியம் (EPF), ஊழியர் நம்பிக்கை நிதியம் (ETF) மற்றும் மேலும் 9 நிதியங்களுக்கு இந்த வரி இல்லை யெனவும் அவர் அறிவித்துள்ளார்.

வரிக்கு உட்பட்டு 2000 மில்லியன் ரூபாயை வருடாந்த வருமானம் ஈட்டும் தனிநபர்கள் அல்லது நிறுவனங்களுக்கு 25 சதவீதம் விதிக்கப்படும் மேலதிகக் கட்டணமானது ஊழியர் சேமலாப நிதியம் உட்பட 11 நிதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். (ம)

# இராணுவ...

சமகால நிமைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் இன்றைய கடன் நெருக்கடிக்கு ஒட்டுமொத்தமாக ராஜபக்ஷவினரே பொறுப்புக்கூற வேண்டும். ராஜபக்ஷவினரின் ஆட்சி இனிமேலும் தொடருமானால் பிரபாகரன், சஹ்ரான் அல்லது ரோஹண விஜயவீரவினால் கூட இதுவரை செய்ய முடியாத அளவிற்கு அழிவுகள் இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

இந்த நாட்டின் மொத்த கடன்களில் 86 வீத கடன்கள் ராஜபக்ஷவினரால் பெறப்பட்டுள்ளது. ஏனைய சகலரது ஆட்சியிலும் மொத்தமாக 14 வீத கடன்களே பெறப்பட்டுள்ளன. நாட்டின் இன்றைய கடன் நெருக்கடிக்கு ஒட்டுமொத்தமாக ராஜபக்ஷவினரே பொறுப்புக்கூற வேண்டும் என்றார். (ம)


## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் வியாபார நிலையம் மற்றும் அறைகள் வாடகைக்கு உண்டு.
தோட்ட வேலையில் ஆர்வமுள்ளவர் முழுநேர/ பகுதிநேர வேலைக்கு தேவை.
(10199)
077 906 3062

## ஆசிரியர் வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் கல்வி நிலையத்திற்கு கணிதம், சுகாதாரம், ஆங்கிலம், தமிழ், புவியியல், வரலாறு பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவை.
(தரம் 6 – 11)
077 087 2903 (C-3783)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (10182)
076 825 7716 (ஆகாஸ்)

## கால்நடைகள் விற்பனைக்கு

1. 2 நாம்பன் கன்றுகள் 60,000/-, 40,000/-
2. சணல் கிடாய் 45,000/-
3. சணல் ஜமுனாபாரி கன்னி ஆடு 40,000/-
4. சணல் நிறைமாத குட்டித்தாச்சி ஆடு 55,000/-

Contact
077 571 6437 (10197)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (10174)
தொடர்பு: றாஜ் - 077 679 6623

## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10148)
077 728 6050

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 - 11 – தமிழ், வரலாறு, புவியியல்
G.C.E A/L - புவியியல்
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
பட்டதாரி ஆசிரியர்கள் மூலம் (10191)
தொடர்பு:- 075 446 5015

Inner Circle
GROW YOUR OWN WAY WITH INNER CIRCLE

## Inner Circle (pvt) Ltd.

முகாமைத்துவ துறையில் 15 வருடங்களுக்கு மேற்பட்ட சிறப்புத் தேர்ச்சி பெற்ற அனுபவம் உள்ளதால் நாம் உங்களை அதை நோக்கி வழி நடத்திச் செல்வோம்.

- Management Trainees
- Tele Callers
- Co - ordinators
- Sales & Marketing Executive

Requirements
- GCE O/L & A/L அல்லது ஏதேனும் சமமான தொழில்முறை தகைமைகள்
- 28 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

கவர்ச்சிகரமான ஊதியம் மற்றும் பிற சலுகைகள் சரியான விண்ணப்பதாரிகளுக்கு காத்திருக்கின்றது. (13,500/= - 45,000/=)
Inner Circle (pvt) Ltd.
இல.100/3, முட்டாசுகடைச் சந்தி,
யாழ்ப்பாணம். 076 770 7759 (10198)

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL (C-3746)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 37 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 14 அடி பாதையுடன்
- தேவைக்கேற்ப பிரித்துக் கொடுக்கப்படும்
- நிலப்பரப்பு
- A32 பிரதான வீதியில் இருந்து 500 m தூரம்
- பயன்தரும் 190 தென்னைகள் உள்ளன
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன (பைப் லைனிங்)

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை

ஒரு பரப்பின் விலை 3,50,000/=

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரி செல்லும் பிரதான வீதியில் தனங்கிளப்பு பகுதியில் கண்ணகை அம்மன் கோயில் வீதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 14 அடி பாதையுடன்
- A32 பிரதான வீதியில் இருந்து 400 m தூரம்

ஒரு பரப்பின் விலை 3,00,000/=

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

தரகர் தேவையில்லை (10180)

தொடர்பு
077 814 7389, 077 117 8578

## வேலை வாய்ப்பு தொடர்பான கருத்தரங்கு

முன்னணி நிறுவனத்தில் சிறந்த காப்புறுதி ஆலோசகர் ஆகுங்கள்!



நாங்கள் இலங்கையில் சிறந்த நாமத்தைக் கொண்ட நிறுவனங்களில் ஒன்று. தேசிய மற்றும் சர்வதேச அளவில் உயரிய விருது பெற்ற நிறுவனம், தொழில் செய்வதற்கு சிறந்த சூழலைக் கொண்ட நிறுவனம், இது இலங்கையில் சிறந்த வியாபார நிறுவனங்களில் ஒரு நிறுவனம்.

நாங்கள் எதிர்பார்ப்பது

க.பொ.த சாதாரண தரம், சந்தைப்படுத்தலில் அனுபவம் (கட்டாயம் அல்ல), சிறந்த தொடர்பாடல் திறன், 20-45 வயதுடையவர்களை.

| | |
|---|---|
| நாங்கள் வழங்குகின்றோம் | . காப்புறுதி ஆலோசகர்<br>. தனிப்பட்ட காப்புறுதி ஆலோசகர்,<br>. அலுவலக உதவியாளர் ( வெற்றிடம் - 01 ) |
| உங்களுக்கு கிடைக்கக் கூடியது | . எல்லையற்ற வருமானம்<br>. மேல் நோக்கி செல்லக்கூடிய தொழில் பாதை<br>. விஷேடமான பயிற்சிகள்<br>. சுதந்திரமாக சேவை செய்யக்கூடிய பொருத்தமான சூழல்<br>. திருப்திகரமான தொழில் |

Great Place To Work. Certified

உங்களை வெற்றியின் பாதையில் அழைத்துச் செல்வோம்!

தொடர்புகளுக்கு :
077 911 6282

இடம் : யூனியன் அஷ்யூரன்ஸ், யாழ். பிராந்திய காரியாலயம்
இல. 218, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

காலம் : 16,17/02/2022

நேரம் : காலை 10.00 மணி

உங்கள் வாழ்க்கைக்கு, எங்கள் பலம். (10190)
UNION ASSURANCE A JOHN KEELLS COMPANY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.